# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 மே - 2001 இதழ் - 5



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபையார்,

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

© 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப் படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

*தபால் பெட்டி எண் 27,*

***காங்கயம்*** - 638 701. இந்தியா

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | அந்நிய பாஷை | 09 |
| 3. | பெண்கள் பகுதி | 12 |
| 4. | ஜெபித்த உங்களுக்கு நன்றி | 15 |
| 5. | I&II.நாளாகமம் ஒரு கண்ணோட்டம் | 16 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் | 17 |
| 7. | மனிதனே உன் விலை என்ன? | 21 |
| 8. | சிறுவர் பகுதி | 24 |
| 9. | சபையின் அங்கத்தினர்.... | 26 |
| 10. | ஆவியில் எளிமையுள்ளவர்கள்... | 31 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

Editor
*S. RAJANAYAGAM*

Honorary Editor
*J.C. CHOATE*

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .14 May - 2001 Issue - 5**


*ஆசிரியவுரை*

# சேதப்படுத்தப்பட்ட விசுவாசம்

பூமிக்குரிய இச்சரீர வாழ்க்கையில் சேதம் என்ற வார்த்தையைக் கேட்க நாம் யாரும் ஒருபோதும் விரும்புவதில்லை.ஆனால், நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பலவகையான சேதங்களை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டும், அதன் விளைவுகளை அனுபவித்துக் கொண்டும் உள்ளோம். ஏற்படும் சேதங்களை முற்றிலும் தடுத்து நிறுத்த நாம் எவ்வளவு தான் முயற்சி எடுத்தாலும், நாம் எதிர்பார்க்கும் வெற்றி கிடைப்பதில்லை.

ஆகவேதான், சேதங்கள் பற்றிய செய்திகளை நாம் தினசரிகளில் வாசிக்கிறோம். வானொலிப் பெட்டிகளின் மூலம் கேட்கிறோம். தொலைக் காட்சியின் மூலம் அவைகளைப் பார்க்கவும் செய்கிறோம். நேரிடும் சேதங்கள் வகைவகையானவை. அவை மண்ணூர்திகள் மோதிக்கொள்வதாலும், விண்ணூர் திகள் விழுந்து நொறுங்குவதாலும், நீர் ஊர்திகள் மூழ்குவதாலும், அடுக்குமாடிக் கட்டிடங்கள் சரிவதாலும், இன்னும் அவைகளில் பெரும் தீ விபத்துக்கள் ஏற்படுவதாலும் இன்னும் பல காரணங்களாலும் நிகழ்கிறது. மானிடத்தின் மதி குறைவால் ஏற்படும் இவ்வகைச் சேதங்களோடு, அநேக சமயங்களில் இயற்கையும் வலியவந்து கூட்டுச் சேர்ந்து ஒரு கை பார்க்கிறது. சேதங்களின் தன்மையும் அவைகளால் ஏற்படும் இழப்புகளை அடிப்படையாக வைத்து மதீப்பீடு செய்யப்பட்டாலும், பெருஞ் சேதத்திற்கு ஆதாரமாக உயிர்ச்சேதமே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகிறது.

மொத்தத்தில், சேதம் எந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அது நெஞ்சுக்கு நோவை ஏற்படுத்தக்கூடியதே.ஆனால், எல்லாவற்றையும் மிஞ்சக்கூடிய

ஒரு சேதம், மனிதனின் வாழ்க்கையில் மறைந்திருந்து, அவன் ஆன்மாவைத் தீர்வே இல்லாத ஒரு பெருஞ்சேதத்திற்கு மெல்லத் தள்ளிச் சென்று கொண்டிருக்கிறது. அதைப்பற்றிய அறிவு துளியும் இல்லாமல், அழிவின் பாதையில் வெற்றி நடை போடுகிறான் மனிதன். அது என்ன என்கிறீர்களா? தன்னை உண்டாக்கின பரலோகத்தின் தேவன் மீது நம்பிக்கை வைக்காமல், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் வாழும் ஒரு வாழ்க்கையினால் ஏற்படும் சேதமே அப்பெருஞ்சேதம்.

இது, ஏன் பெருஞ்சேதம் என்றால், பூமியில் நாம் காண்கின்ற சேதங்களால் ஏற்படும் தீமைகளும், வேதனைகளும், கண்ணீர்களும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையக் கூடியது. மற்றும் மெல்ல மெல்ல மாறக்கூடியது.ஆனால் விசுவாசக் குறைவினால் ஏற்படும் சேதமோ நிலையானது:நீடித்திருக்கக் கூடியது; என்றென்றும் மாறாதது; கால எல்லைகளைக் கடந்து அது நித்தியமானது. ஆகவே தான், இச்சேதம் பூமியின் சேதங்களை "மிஞ்சும்" சேதமாகச் சொல்லப்படுகிறது.

இப்பெருஞ்சேதத்திற்குத் தப்பியவர்கள் மற்றும் சிக்கியவர்கள் பட்டியல் பரிசுத்த வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் விசுவாசக் கப்பலை சேதப்படுத்தாமல் ஒழுங்காக ஓட்டிக்கரை சேர்ந்தவர்கள் யார் யாரென்று விபரமாக நமக்கு அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். சிலர், இக்கப்பலைச் சேதப்படுத்தியுமுள்ளனர். அவர்களில் இருவர் நேரிடையான குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளனர். அவர்களைப் பவுல் தன்னுடைய நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார். ***"இந்த நல் மனசாட்சியை சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனெயும், அலெக்சாந்தரும் அப்படிப்பட்டவர்கள்..."*** (1.தீமோத்.1:19,20).ஏதோ இவர்கள் மாத்திரமே தவறு செய்தவர்கள் என நாம் நினைக்கத் தேவையில்லை. ஏனெனில் இவர்களின் தலைமையில் கீழ் அணிவகுத்து நிற்க இவ்வுலகம் முழுவதும் முண்டியத்துக் கொண்டு நிற்கிறது.

சரி, நம்முடைய தலைப்பிற்குத் துணை நிற்க, விபரமாகச் சொல்லப்படாத இந்தப் புதிய ஏற்பாட்டு மனிதர்களின் உதவியை நாடுவதைக் காட்டிலும், நம்மெல்லோருக்கும் பழக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு ராஜா ஒருவனின் ஒத்தாசையைக் கேட்டுப் பார்க்கலாம் என எண்ணுகிறேன்.

ஆஜானுபாகுவான சரீர அமைப்புக் கொண்ட அந்த ராஜாவின் பெயர் சவுல். இஸ்ரவேலின் கடைசிக் கோத்திரமான பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த இவன் தகப்பன் பெயர் "கீஸ்" (1.சாமு.9:1,2)இவனைப் பற்றி அதிகம் அறிவிப்பது அவசியமில்லாதது, ஏனெனில் இவன் நம் யாருக்கும் புதியவனல்ல.

எதற்கும், இவன் ராஜா ஆன பின்னணியைக் கொஞ்சம் ஞாபகப்படுத்து கிறேன். மாபெரும் தலைவனாகிய யோசுவாவின் மரணத்திற்குப் பின் தேவன் தம்மால் ஏற்படுத்தப்பட்ட நியாயதிபதிகளைக் கொண்டு இஸ்ரவேலை சுமார் 350 ஆண்டுக் காலம் ஆண்டு வந்தார். எதிலும் மனமேவுதலை எளிதில் பெற்றுக் கொள்ளாத இஸ்ரவேலர், நியாயாதிபதிகள் விஷயத்திலும் திருப்திப்படவில்லை.

மற்ற ஜாதிகளுக்கு இருப்பதுபோல் எங்களுக்கும் ராஜா வேண்டுமென்று சாமுவேலிடம் முறையிட்டனர். (1.சாமு.8:5).

இவர்களின் இக்கோரிக்கையில், கர்த்தர் கடுமையாக அதிருப்தியுற்று இது குறித்து சாமுவேலின் விண்ணப்பத்திற்கு இவ்விதமாக பதில் தந்தார்.''**ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்**'' (8:7) என்றார்.

அது மாத்திரமல்ல, ராஜாவினால் அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் ஏற்படும் தீமைகளையும் விபரமாக எடுத்துக் கூறினார் (8:11-22) இருப்பினும், தன்னுடைய கடுமையான அதிருப்திக்கும், எச்சரிப்புக்கும் ஜனங்கள் செவிகொடுக்காதே போனபடியால், அவர்களின் ''ராஜா கோரிக்கையை '' ஏற்றுக்கொண்டார்.

இஸ்ரவேல் என்பது பூமியின் கீழிருக்கிற சகல ஜனத்திலும் ஆசீர்வதிக்கப் பட்ட ஜனம். என்னுடைய ஜனமென்று தேவன் இவர்களை மாத்திரமே அழைத்தார் (2.நாளா.7:14). பரலோகத்தின் தேவன், பல இடங்களில் தன்னை இஸ்ரவேலின் தேவனென்றே வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தளவுக்கு சிலாக்கியம் பெற்ற ஜனத்திற்கு ராஜா என்பது சாதராண விஷயமல்ல. அதுவும் எப்படி முதல் ராஜா, எப்பொழுதும் முதல் என்பது பெருமைக்குரியது. நினைவில் நிற்கக்கூடியது. ஏன், சரித்திரத்திலும் இடம்பிடிக்கக் கூடியது.

இவ்வளவு மகிமை பொருந்திய இந்த ராஜா ஸ்தானம் சவுலுக்கு எப்பொழுது கிடைத்தது தெரியுமா? ஒரு சமயம், காணாமல் போன தன் தகப்பனுடைய கழுதைகளைத் தேடிட தன் வேலைக்காரனோடு சென்றான். ஊரெல்லாம் சுற்றி, மேடு பள்ளங்களெல்லாம் ஏறி, இறங்கி, சளித்துப் போய், சரி இனி வீடு திரும்பலாம் என எண்ணின வேளையில், வேலைக்காரனின் வேண்டுகோளின்படி, அரைகுறை மனதோடு சாமுவேலைச் சந்திக்கச் சென்றான். அங்கு தான், கழுதையைத் தேடிச் சென்ற இவனுக்கு ''ராஜ அதிர்ச்சி'' காத்திருந்தது (9:1-21).

உன்னத தேவனால் தெரிந்து கொள்ளப்படுமளவிற்கு ஆரம்பத்தில் இவனுக்கு விசுவாசம், தேவன் மீது நம்பிக்கை இருந்திருக்கவே வேண்டும். ஏனெனில் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கும் நமது தேவன், தகுதியில்லாத ஒருவனை தன்னுடைய வேலைக்காகத் தெரிந்து கொள்ளமாட்டார். ஆனால் தன்னுடைய நம்பிக்கைக்கு இவ்வளவு பாத்திர வானாயிருந்த இதே சவுலைக் குறித்து தேவன் தமது வசனத்தில் பின்னாளில் எப்படிக் கூறுகிறார் எனக் கவனியுங்கள். '' **அதற்குச் சாமுவேல் : கர்த்தர் உன்னை விட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்?** (28:16). இப்பொழுது சவுல் கர்த்தருக்குச் சத்துரு ஆம், எதிரி. எப்படி நேர்ந்தது இந்த மாற்றம்? இராஜாவாகிய சவுல் தன்னுடைய விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்தி

யுள்ளான். விசுவாசம் இருந்தது எழுந்தான். விசுவாசத்தை சேதப்படுத்தினான். வீழ்ந்தான்.

இவன் எப்படி தனது விசுவாசத்தை சேதப்படுத்தினான் என்று சிலவற்றை ஆராய்ந்தால், நாம் நமது விசுவாசத்தை சேதப்படுத்தாமல் காத்துக் கொள்ளப் பிரயோஜனமாய் இருக்குமென நம்புகிறேன்.

## I. சோதனையான நேரத்தில் தடுமாறினான்.

தனது ராஜ்யபாரத்தின், இரண்டாம் வருஷத்தில் சவுல் ஒரு யுத்தத்தைச் சந்திக்க வேண்டியவனாக இருந்தான். பெலிஸ்தர், முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரை வீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் வந்து பாளையமிறங்கியிருந்தனர் (13:5). நிலைமையைக் கண்டறிந்த நன்றியில்லாத இஸ்ரவேலர், பயந்து நடுங்கி, **''கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும் ஒளித்துக் கொண்டார்கள்''** (13:6)

சாமுவேல் வந்து பலி செலுத்தி யுத்தத்தைத் தொடங்கி வைப்பான் என்று எதிர்பார்த்த ஜனங்கள். அவன் வரத் தாமதமானபோது சிதறி ஓடிப்போனார்கள் (13:8). **அப்பொழுது சவுல், சர்வாங்க தகன பலியையும் சமாதான பலிகளையும் என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று சொல்லி, சர்வாங்க தகன பலியைச் செலுத்தினான்.** (வ.10).

தனது இராஜ்யபாரம் தள்ளுண்டு போவதற்கும் விசுவாசக்கப்பலைச் சேதப்படுத்துவதற்கும் இங்கே தான் போட்டான். அப்படி என்ன தவறு செய்துவிட்டான் என்று கேட்கிறீர்களா? நீர் செய்தது என்ன என்று சவுலைப்பார்த்து சாமுவேல் கேட்டதற்கு சவுலின் பதிலைப் பார்த்தால், அவன் ஒன்றும் பெரிய தவறு செய்யவில்லை என்றே தோன்றுகிறது. நானும் உங்களைப் போலத்தான் நினைக்கிறேன். ஆனால், வேதாகமம் வேறுவிதமாகச் சொல்கிறதே." **புத்தியீனமாய் செய்தீர்''** என்று சவுல் கடிந்து கொள்ளப்படுகிறாரே தேவன் நீதி தவறாதவராயிற்றே பொய்யாகக் குற்றம் சாட்டி தண்டிக்கமாட்டார் தானே. அப்படியானால் சவுல் என்ன தான் தவறு செய்தான்?

அவன் செய்த தவறு அவனுடைய அவிசுவாசம் தான். என்ன நேர்ந்தாலும், எது வந்தாலும், எப்படி நடந்தாலும் பரவாயில்லை. கர்த்தர், என்னையும் என் ஜனங்களையும் காப்பாற்றுவார் என்று விசுவாசியாமல், பொறுமையிழந்தான். தோல்வியே வந்தாலும், கர்த்தர் இதை வேறுவகையாய் நடத்துவார் என்று நம்பவில்லை. சாமுவேலின் வேலையை அவசரப்பட்டு தானே செய்தான்.பலி **செலுத்துவதின் வெளி ஆசாரங்களைச் செய்தானே ஒழிய அதில் அடங்கியிருக்கும் உட்கருத்தை அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.** இப்படிப்பட்ட காரியத்தைக் கர்த்தர் ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. அங்கீகரிப்பதில்லை. அங்கீகரிக்கப் போவதுமில்லை.

ஒருவேளை சவுல், தான் ராஜாவாக இருக்கிறபடியால் தான் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம்.எல்லாவற்றையும் கர்த்தர் ஏற்றுக் கொள்வார் என்று எண்ணியிருக்கலாம். உலக அந்தஸ்தெல்லாம் அவர் பார்வையில் ஒன்றுமில்லையென்பது ஏனோ அவனுக்கு விளங்காமற் போயிற்று. எப்படியோ, அவன் தனது விசுவாசக் கப்பலை சேதப்படுத்தும் முதல் வேலையை இங்கே வெற்றிகரமாகத் துவக்கிவிட்டான்.

அன்பரே! நம்முடைய விசுவாசக் கப்பல் எப்படிப் போய்க் கொண்டுள்ளது? சோதனையான நேரத்தில் கர்த்தர் மீது முழு விசுவாசம் வைத்துப் பொறுமை காக்கிறோமா? அல்லது அவசரப்பட்டு மாற்று ஏற்பாடு செய்து சிக்கலில் மாட்டிக் கொள்கிறோமா? பொறுமையின் சிகரமாகிய யோபுவையும், அவன் வாழ்க்கையையும் அதினால் அவன் பெற்ற இரட்டிப்பான ஆசீர்வாதத்தையும் நாம் அறிவோம். ஆகவே சோதனையில் பொறுமை காத்து, தேவ சித்தத்துக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

அடுத்து, கர்த்தருடைய மனிதன் செய்ய வேண்டிய வேலையை, அவனே வந்து செய்யட்டும் என்று காத்திருப்போம். புதிய பிரமாணத்தின் நிலை கொஞ்சம் வேறாக இருந்தாலும், கர்த்தருடைய ஊழியனை உதாசீனப்படுத்து என்று எங்கும் சொல்லவில்லையே. ஆனால், இன்று கிறிஸ்தவ சமுதாயத்தில் என்ன நடக்கிறது? உலகக்கல்வியும், அந்தஸ்தும் இருக்கிறபடியால், தாங்கள் சமுதாயத்தில் செல்வாக்குள்ளவர்களாக இருக்கிறபடியால், கர்த்தருடைய காரியத்தில் கூட தாங்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம். எப்படிச் செய்தாலும் தேவன் தங்கள் செய்கையை ஏற்றுக் கொள்வார் என்று நம்புகின்றனர். தவறு, சகோதரனே, தவறு.

நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ள விசுவாசக் கப்பலை நாம் நம்முடைய பொறுமையின்மையாலும்,வெளிப்படையான சடங்குகளாலும், அகந்தையான எண்ணத்தினாலும் சேதமாக்க வேண்டாம்.

## II.சுயசித்தமுள்ளவனாயிருந்தான்

சவுலின் அடுத்து சறுக்குதலுக்கான காரணம் 15-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அமலேக்கியரோடு யுத்தம் எப்படி இருக்க வேண்டுமென்று கர்த்தர் சாமுவேலைக் கொண்டு சவுலுக்குச்சொல்கிறார். இந்த அமலேக்கியர் வனாந்திர யாத்திரையில் இஸ்ரவேலுக்கு செய்த தீமைகளை சுமார் 400 ஆண்டுகளாகியும் மறக்காத தேவன், அவர்களை ஈவிரக்கமில்லாமல் நிர்மூலமாக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார். '... **நீ போய் அமலேக்கை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் குழந்தை களையும், மாடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக் கடவாய் என்கிறார் என்று சொன்னான்**''(15:3).

தேவசித்தம் இப்படித் தெளிவாக வெளியாகியிருக்கும் போது, சவுல் செய்தது என்ன? "சவுலும் ஜனங்களும், ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும் இரண்டாந்தரமானவைகளையும் ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப் போட மனதில்லாமல் தப்ப வைத்தான்..." (15:9).

இங்கே, சவுலுடைய தவறு என்ன? தேவசித்தத்தைக் காலின் கீழ் போட்டு மிதித்துவிட்டு, சுயசித்தத்தின்படி நடந்தான். இரண்டாவது தேவ கட்டளையை அரையும் குறையுமாக ஒப்புக்கு நிறைவேற்றினான். மூன்றாவதாக தனது கீழ்ப்படியாமையை நியாயப்படுத்தும் விதத்தில், பலி செலுத்துவதற்கு இவைகளை ஜனங்கள் கொண்டு வந்தார்கள் என்று சொல்லி, பழியை மற்றவர்கள் மீது போட்டான். (15:15).

எரிச்சலடைந்த சாமுவேல் பேச்சை நிறுத்தும் எனக்கடிந்து விட்டு, மேலும், கர்த்தர் இன்று இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன் என்று சொல்லி, அவனுடைய கீழ்ப்படியாமையை கோடிட்டுக் காட்டினான். கர்த்தரின் சொல்லைக் கேளாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்று கேட்டான். (15:19)தொடர்ந்து வாசித்தால், எது முக்கியம் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறான். "அதற்கு சாமுவேல் ; கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்றான்" (வச.22).

நாம் எப்படி நடக்கிறோம்? கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடுக்காமல், மற்ற செய்கைகளின் மூலம் நீதியை நிலை நாட்டி விடலாம் என்று சவுலைப் போல எண்ணுகிறோமா? முடியாது. தேவன் அவைகளில் பிரியப்படுவது இல்லை. ஒரு வேளை நாம் அவரைத் துதித்து அழகாகப் பாடலாம், மணிக்கணக்கில் ஜெபிக்கலாம். வாரந்தவறாமல் ஆராதனைக்கு வரலாம். தாராளமாகக் காணிக்கை கொடுக்கலாம், சரீரத்தை வருத்தி உபவாசம் இருக்கலாம், விமரிசையாக பண்டிகைகள் கொண்டாடலாம் இன்னும் எது வேண்டுமானாலும் செய்யலாம்.ஆனால் நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத போது, மேற்சொன்ன எதிலும் அவர் பிரியப்படமாட்டார். அனைத்தும் வீண்.

என் வசனத்துக்கு நடுங்கிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்று அவர் சொல்கிறார். ஏசா.66:2 வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் அருவருப்பானது என்றும் சொல்கிறார் (நீதி. 28:9).

தன்னுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் மனிதன் தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டுமென்பதை, இதைவிடத் தெளிவாக எப்படிச் சொல்ல வேண்டுமென்று

எதிர்பார்கிறீர்கள்? இதே போதும் என்பது உங்கள் பதிலாக இருக்குமானால் பின் ஏன் அற்புதம் என்றும் அடையாளமென்றும் ஆவி என்றும் சாட்சி என்றும் அலைகிறீர்கள் வசனத்திற்கு மாறான காரியங்களை இன்னும் செய்கிறீர்கள்? உங்கள் விசுவாசக் கப்பல் கரைசேர வேண்டாமா?

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தன்னுடைய விசுவாசக் கப்பலை சேதப்படுத்தியதால் சவுல் இழந்துபோனது பூமிக்குரிய மகிமை. ஆனால் நாம், தேவ வசனத்தைப் புறக்கணிப்பதால் இழந்து போவது நித்திய மகிமை. இழந்து போகும் படியாகவா நீங்கள் கிறிஸ்தவர்களாக ஜீவித்துக் கொண்டுள்ளீர்கள்? இல்லைதானே.

அப்படியானால் நாம் ஒவ்வொருவரும் நம்மை தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம். சுய சித்தத்தைத் தூக்கி எறிவோம்.

## III . உற்ற நண்பனை அறியாதிருந்தான்

நல்ல நண்பன் யாரென்பதற்குப் பல இலக்கணங்கள் உண்டு. நீதிமொழிகளில் ''சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்...'' என்று ஞானி சாலமோன் அழகான ஒரு விளக்கம் கொடுக்கிறார் (17:17) இந்த சாமுவேலும் கூட சவுலை எப்பொழுதும் சிநேகித்தான். தேவ கட்டளைப்படி அவனைக் கடிந்து கொண்டாலும், அவனைத் தொடர்ந்து நேசித்தான்.

அமலேக்கோடே நடந்த யுத்தத்தில், சவுல் தன் சொல் கேளாதபடியால், ''சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னை விட்டுத் திரும்பி என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான் என்றார். அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து **இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்''** (15:11) இந்த கர்த்தருடைய மனிதனுக்கு சவுல் ராஜாவின் மீது எவ்வளவு பாசமும் அக்கறையும் இருந்தது பாருங்கள். தன்னை இந்தளவுக்கு நேசித்த ஒருவனின் மனதை இவன் ஒரு போதும் புரிந்து கொள்ளவில்லை.

ஒருவேளை, சவுல் ராஜா எப்பொழுதும் இந்தக் கர்த்தருடைய மனிதனாகிய சாமுவேலின் சொற்கேட்டு நடந்திருந்தால் இந்நிலை இவனுக்கு நிச்சயமாக வந்திருக்காது. தேவனைவிட்டு இவன் விலகிச் சென்றிருக்கத் தேவையில்லை. விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தி, மேன்மையை இழந்து போயிருக்கவும் தேவையில்லை.

இரா முழுவதும் சவுலுக்காக மன்றாடின சாமுவேலைப் போல நல்ல நண்பர்கள் நம் ஒவ்வொருவருக்கும் உண்டா? நாசியிலே சுவாசமுள்ள மனிதனை நம்பவேண்டாமென்று வசனத்தில் சொல்லிவிட்டு நல்ல நண்பன் உண்டா என்று கேட்டால், நாங்கள் எங்கே போவோம் என்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். சாமுவேலைக் காட்டிலும் நல்ல நண்பர் நமக்கிருக்கிறார். அவனைக் காட்டிலும்

நம்மீது கரிசனை உள்ளவர் அவர். யோவான் 15:15-ஐக் கவனியுங்கள். ''நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்'' என்று இயேசு சொல்கிறார். இந்த நண்பர் நமக்காக என்ன செய்தார்? தன் ஜீவனையே கொடுத்தார். (யோவா.3:16) நமக்காக உயிர் கொடுத்த இயேசு இரா முழுவதும் மன்றாடின சாமுவேலைக் காட்டிலும் நல்ல நண்பர் தானே.

சரி, இவ்வளவு தூரம் நம்மை நேசிக்கும் இவரின் ஆலோசனைக்கு நாம் ஏன் செவி சாய்க்கக் கூடாது? இவர் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்? அன்று, தேவ மனிதனாகிய சாமுவேலின் வார்த்தைக்குச் செவி கொடாமல், இராஜ்யபாரத்தை இழந்துபோன சவுல் போல, இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைக்குச் செவிகொடாமல் நித்தியத்தை இழக்கப் போகிறோமா?

அன்பரே!நண்பரே! சகோதரரே! சிந்திப்போம். சவுல்ராஜவைப் பற்றி அநேகந்தரம் வாசித்தும் கேட்டும் இருக்கிறோம். ஆனால், அவன் கொஞ்சம் வித்தியாசமான மனிதனாக இன்று நம்மிடம் வந்துள்ளார். இப்பொழுது அவர் இராஜாவாக நம் முன் நிற்காமல், பாடம் புகட்டும் ஆசானாக நிற்கிறார். ஆகவே, அவருடைய வாழ்க்கையின் மூலம் கிடைக்கும் பாடத்தைக் கற்றுக்கொள்வோம்.**''முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது''** என்று பவுல் உரோமையருக்கு எழுதும் போது குறிப்பிடுகிறார் (ரோம.15:4).

ஆகையால், சவுல் ராஜா தன்னுடைய விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்தினது போலநாம் சேதப்படுத்த வேண்டாம். தேவன் மீது வைத்த நம்பிக்கையை வீணடிக்க வேண்டாம் அழைப்பை உதாசீனம் செய்யவேண்டாம். மேன்மையை இழந்து போகவும் வேண்டாம்.

சவுலைப் போலல்லாமல், சோதனையான நேரத்தில் உறுதி காட்டுவோம், விசுவாசத்தில் எழுந்து நிற்போம், தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம். நல்ல நண்பராகிய இயேசுவின் ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு அவர் தமது வசனத்தில் சொல்லியுள்ளபடி விசுவாசித்து (ரோம.10:17) மனந்திரும்பி (2.கொரி.7:10) அறிக்கையிட்டு (ரோம.10:9,10) பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்று (அப்.2:38) நல்ல நண்பராகிய இயேசு கட்டின அந்த ஒரு சபையில் அங்கமாகி (அப்.2:47) இறுதிவரை விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தாமல் வாழ்ந்து பரலோக பாக்கியத்தைப் பெறுவோம்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**E.Z.S. ராஜ நாயகம்**

# அந்நிய பாஷை

நமக்குள் இருக்கிற மார்க்க கூட்டத்தாரில் சிலர், தாங்கள் இன்றும் அந்நிய பாஷைகளிலே பேசுவதாகக் கூறிக்கொள்கின்றனர். தேவன் தமது ஆவியானவரைக் கொண்டு தங்களிடம் கிரியை செய்து, தங்கள் மூலம் பேசுவதாக சுய விளக்கமளிப்பார்கள். மேலும் அவர்கள் தாங்கள் என்ன பேசுகிறார்கள் என்று தங்களுக்கே தெரியாது என்றும், அவர்கள் பேசுவதைக் கேட்கிறவர்களுக்கும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாது. தேவனுக்கு மாத்திரம் தெரிய பேசுவதாகக் கூறிக்கொள்கின்றனர். ஆனால் வேதம் அப்படிப்பட்ட காரியம் எதையும் போதிப்பதில்லை. அப்படிப்பட்ட மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்களேயன்றி எந்த ஒரு அந்நிய பாஷையிலும், பேசுவதில்லை, மாறாக அந்நிய பாஷையிலே பேசுகிறோம் என்று உளறுதலுக்குமேல் உளறலையே பேசுகின்றனர்.

வேதாகமம் அந்நிய பாஷையைக் குறித்து பேசுகிறது. (1.கொரி.14:2), ஆனாலும் பேசுகிறவர்களுக்கு அது அந்நிய பாஷையன்று. இதில், பேசுபவர்கள், தாம் பேசுவது இன்னதென்று புரிந்து கொள்கிறார். ஆகிலும் கேட்கிற கூட்டத்தார் புரிந்து கொள்வதில்லை- இப்படியாக பேசுபவரின் புரிந்து கொள்ளுதலும் பிரயோஜனமற்றது. இதன் விளைவாக பேசுகிறவர் தேவனிடத்தில் பேசி அவர் பக்தி விருத்தியடைந்து கொள்ளலாம் (தான் புரிந்து கொள்வதினாலே). ஆகிலும் அவர் பேசிய மக்கள் கூட்டத்தாருக்கு அது அர்த்தமற்றதும், புரியாத அந்நிய பாஷையாகவும் அது இருக்கிறது. (1.கொரி.14:4)

**"அந்நிய பாஷை"** என்பது புரிந்து கொள்ளுகிற வார்த்தைகளே என்பதை நாம் அறிவோம். ஏனெனில் பவுல் இதை தெளிவாக்கி, "அது போல நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படி தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே" (1.கொரி.14:9) என்று கூறிகிறார். தொடர்ந்து பவுல், " என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (1.கொரி. 14;14,15) என்று கூறுகிறார். அந்நிய பாஷை என்று இங்கே குறிப்பிடப்படுவது பேசுவதை கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு அது அந்நிய மொழி. ஆகையால் அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பவுல் தான் ஜெபிக்கிறபோது கேட்பவர்களுக்கு அர்த்தமற்றதாகிவிடும் என்று கூறுகிறார். அவர் பாடுகையிலும் அப்படியே. ஆதலால் அவர் ஜெபிப்பதும் பாடுவதும் ஆவியோடும் அதே நேரத்தில் புரிந்து கொள்ளுதலோடும் இருக்க வேண்டுமென தீர்மானிக்கிறார்.

எனவே பவுல் அந்நிய பாஷை என்று குறிப்பிடுகிறபொழுதெல்லாம் மாற்று மொழியையே குறிப்பிடுகிறார். இப்படியாக தான் அந்நிய பாஷை என்று பேசும்போது அந்நிய மொழிகளைப் பற்றித்தான் பேசுகிறார். தமது கருத்தை

தொடர்ந்து வலியுறுத்தி, ''இல்லாவிட்டால்,நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் (அதாவது பேசப்படும் மொழியைப் புரிந்து கொள்ளாதவன்) என் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே, ''நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் பக்திவிருத்தியடைய மாட்டானே. உங்களெ ல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப்-பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்த ரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்'' (1.கொரி. 14:16-19).

அப்போஸ்தலன் தொடர்வதைப் பாருங்கள், மறுபாஷைக்காரராலும், மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன். ஆகிலும் அவர்கள் எனக்கு செவிசாய்ப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக் கிறதே. அப்படியிருக்க அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாள மாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமா யிருக்கிறது. (1.கொரி. 14:21,22).

மறுபடியும் கவனியுங்கள்; ''யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால்,அது இரண்டு பேர் மட்டில், அல்லது மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப்பேசக்கடவன். (பேசுகிறவன் அர்த்தத்தை புரிந்து கொள்வான்) தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்'' (1.கொரி.14:27,28) பேசப்படுவதை அறியாத மக்களுக்கே அந்நிய பாஷையாகிய அந்நிய மொழி. எனவே அந்நிய பாஷையிலே யாராகிலும் பேசினால் ஒவ்வொருவராய் பேசி அதற்கு அர்த்தத்தையும் சொல்லட்டும். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் அவன் அமைதலாக இருந்து தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசக்கடவன். இன்னொரு வார்த்தையில் சொன்னால், அவர்கள் தனிப்பட்ட முறையில் ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இப்பொழுது அந்நிய பாஷையில் பேசும் வல்லமை யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது? அப்போஸ்தலர்கள் அப்படி வல்லமையை பெற்றிருந்தனர். ஏனெனில் கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தின் பேரில் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை அவர்களுக்கு கொடுத்ததின் அடையாளமாக மாற்று மொழிகளிலே பேசினர். (அப்.2:6) கொர்நெலியுவும் அவனுடைய வீட்டாரும் கூட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றனர். இதன் மூலம் புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர் எனக் காட்டவும், அவர்கள் மாற்று மொழியிலே பேசினர் (அப்.10). பிறகு அப்போஸ்தலர்கள் கைகளை வைக்கிறதினால் பரிசுத்த ஆவியை பெற்றவர்கள்மாற்று மொழிகளிலே பேசும் வல்லமையைப் பெற்றிருந்தனர். (அப்.19:1-7)வேறு யாராகிலும் அந்நிய பாஷையிலே (மாற்று மொழிகளிலே)

பேசினார்களா? வேறுயாராகிலும் அப்படி பேசினார்கள் என்று வேதம் குறிப்பிடுவதில்லை. ஆனால் இந்த மனுஷர்கள் அப்படிப்பட்ட வல்லமையை ஏன் பெற்றிருந்தார்கள்? அவர்கள் எல்லாரும் உலகின் பல பாகங்களுக்கு சென்று சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறதற்காக, அந்தந்த ஸ்தல மொழியைக் கற்க நேரம் எடுத்துக்கொள்ளாமலும், மொழியாக்கம் செய்யும் நபரை வைத்துக் கொள்ளாமலும் இருக்கும் பொருட்டு இந்த வல்லமை அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இது எவ்வளவு காலம் நீடித்தது? புதிய ஏற்பாடு எழுதப்பட்டு உலகிற்கு கொடுக்கப்படும் வரை பவுல், அற்புத விதமாக அந்நிய பாஷை (மாற்று மொழி) பேசும் சக்தி ஒழிந்து போகும் என்று பவுல் சொன்னார். (1.கொரி.13:8-10; யாக்: 1:25). ஆகையால் இன்று அற்புத வரத்தின் அடிப்படையில் அந்நிய பாஷை பேசும் வரம் இல்லை. அப்படியொரு தேவையும் இல்லை. வேதாகமம் பூர்த்தியாகி உலகெங்கும் கொடுக்கப்பட்டாயிற்று.

இன்று அந்நிய பாஷையிலே பேசுவதாக கூறிக்கொள்ளும் சிலர் கூட, அநேக காரியங்களை கவனிப்பதில்லை.

1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை.

2. அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியை கொடுப்பதன் மூலம் பெறும் அளவும் இன்று இல்லை. ஏனெனில் அப்போஸ்தலர்கள் யாவரும் இறந்துவிட்டனர்.

3. அந்நிய பாஷையில் பேசியபோதெல்லாம் பிற (உலகில் உள்ள) மொழிகளிலேயே பேசினர்.

4. அந்நிய பாஷையில் பேசுதல் அவிசுவாசிகளுக்காக மட்டுமே. (ஆனால் இன்று தங்களுடைய விசுவாசிகள் கூடிவருகிற கூட்டத்தில் தான் குறிப்பாக அந்நிய பாஷையில் பேசுகின்றனர்)

5. இன்று அந்நிய பாஷையிலே பேசுகிறோம் என்று கூறுவோர் தாங்கள் பேசுவது தங்களுக்கும் புரியாமல் உபதேசங்கள் பேசுவதை கேட்க வந்த கூட்டத்தாருக்கும் புரியாமல் பேசுவார்களேயாகில், பிறகு தேவன் மாத்திரம் தாங்கள் பேசுவதை எப்படி புரிந்து கொள்ளக்கூடும்? புதிய ஏற்பாட்டின் (முதல் நூற்றாண்டு)காலத்தில் அப்படியிருந் ததில்லை. எனவே இப்படிப்பட்ட வல்லமை இன்று யாருக்கும் இல்லை.

6. பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் ஏற்கனவே உள்ள பிற மொழிகளில் பேசினதுபோல, இன்று அந்நிய பாஷையிலே பேசுவதாக கூறுவோர் பேசுவதில்லை. அவர்களின் பிரசங்கியார்கள் இந்தியாவுக்கு வரும்போது, இன்று ''அந்நிய பாஷை வரம் இல்லை'' என்று போதிக்கிற நம்மைப்போலவே மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். எனவே எவ்வகையிலும் இன்று தாங்களும் அந்நிய பாஷையிலே பேசுவதாக கூறிக் கொள்வோர் புதிய ஏற்பாட்டின் ஆரம்பக்காலத்தில் பேசினவர்களுடன் ஒப்பிட்டு பார்க்க இயலாது.

முடிக்கும் தருவாயில் நாம் அறிய வேண்டியது, அநேக மக்கள் இப்படிப்பட்ட போதனையினால் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள். எனவே நீங்கள் உங்கள் வேதத்தை வாசித்து கற்று இந்தப் பாடத்தை நன்கு புரிந்து கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறோம். இன்று மனிதர்களுக்கு எவ்வித வரங்களும் கொடுக்கப்படமாலேயே தனக்கோ அல்லது பிறருக்கோ ஏதோ வரங்கள் இருப்பதாக கூறிக் கொள்வது மூலம் தயவுசெய்து உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளாதீர்கள்.

**J.C.Choate** **J.C. சோட்**

(பெண்கள் பகுதி)

# கிறிஸ்தவக் குடும்பத்தை கட்டுவது

மனிதனுடைய தேவைகளை சந்திப்பதற்காக தேவனால் வடிவமைக்கப் பட்ட ஸ்தாபனம்தான் குடும்பம் என்பது.(ஆதி.2:8-25)குடும்பம் தன் காரியத்தில் தவறும் போது சமுதாயம் சீரழிகிறது. இன்றைய சமுதாயமானது, மிகவும் பலவீனமான, பிரயோஜனமற்ற, முறிந்துபோன, உடைந்துபோன குடும்பங்களை உள்ளடக்கியுள்ளது.

ஆதியிலிருந்தே ஒரு ஆண் ஒரு பெண்ணோடு இணைந்து வாழவேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருந்தார். ''அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்தீரி தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்'' (ரோம.7:2) வீடு, குடும்பம் ஆகிய இரண்டுமே, பிதா, குமாரன் ஆகிய இருவருக்கும் மிகவும் முக்கியமாகப்பட்டது. ''இப்படியிருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கி றார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார்'' (மத்.19:6).

குடும்பத்திற்குள்ளாகத்தான் ஒரு கணவனும், மனைவியும் அன்பைப் பெற்றுக் கொள்கின்றனர். ஒரு கூட்டாளித்தனத்தையும், தங்களைத் தாங்களே திருப்திபடுத்திக்கொள்ளும் தன்மையையும் (1.கொரி. 7:2-5) பெற்றுக் கொள்கின்றனர். பிள்ளைகளை இந்த உலகிற்கு கொண்டுவரவும், அவர்கள் குடும்பத்தில் அப்பா, அம்மாவுடன் வளரவும் தேவன் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் இன்றைக்கு குடும்பங்கள் சாத்தானால் தாக்கப்பட்டு இருக்கிறது. சாத்தானோடு இருக்கும் போராட்டத்தில், நம் குடும்பத்தைக் காப்பற்றிக் கொள்ளும் விஷயத்தில் நாம் பாடுபட வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் என்பது ''ஒப்புக்கொடுத்தல்'' என்ற கல்லின்மேல் கட்டப்படவேண்டும். முதலாவது கணவனும், மனைவியும் தேவனுக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். (1.கொரி. 15:1-4 ; மாற்கு 16:16) அத்தோடு கூட ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்து வாழ வேண்டும். ஒரு வல்லமையான, கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்ட குடும்பத்தில் ஒவ்வொருவர் நலனுக்காகவும்,

மகிழ்ச்சிக்காகவும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தல் மிகவும் அவசியம். ஒரு பலமுள்ள குடும்பத்தைக் கட்ட தன்னலமில்லாமல் நீ உன் நேரத்தையும் உன் பலத்தையும், உன் உடமைகளையும் அத்தோடு உன்னையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒப்புக்கொடுத்தலுக்கு விரோதி சுயநலம்.

தேவனுக்கு சேவை செய்வதின் மூலம் குடும்பங்கள் கட்டப்பட வேண்டும். தேவனுடைய சபையின் ஆராதனையில் தவறாமல் பங்கு கொள்வது கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு மிக அவசியமானது. ''சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும். (எபி.10:25) ஒரு ஆராதனையையோ, ஒரு வேதபாட வகுப்பையோ அசட்டை செய்து கலந்து கொள்ளாமல் இருப்பது கிறிஸ்தவம் அவ்வளவு முக்கியமல்ல என்பதை உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வழிவகுத்துவிடும். ஒரு குடும்பத்தை கட்டுவதற்கு ஜெபமும், வேதவாசிப்பும் முக்கிய பங்கை வகிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், தேவன் 1.நித்தியமானவர் (சங்.90:2) 2. எல்லாம் வல்லவர் (ஆதி.1:3),3. நல்லவர் (யாக்.1:17), 4. பரிசுத்தமுள்ளவர் (1.பேதுரு 1:16), 5. எங்கும் வியாபித்துள்ளவர் (சங்.139) முதல் முதலாக குடும்பத்தை ஸ்தாபித்த அந்த நித்திய தேவனை ஆராதிக்காமல் ஒரு மகிழ்ச்சியுள்ள பலமுள்ள வெற்றியுள்ள குடும்பங்கள் கட்டப்படவே முடியாது.

ஒருவரையொருவர் '' மெச்சிக் கொள்ளுதல்'' என்ற கல்லின்மீது கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டவேண்டும். மனிதகுலம் எதிர்பார்க்குதலில் மிகவும் தலையானது யாதெனில் பிறரிடம் மெச்சுதலைப் பெற்றுக் கொள்வது. கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் இந்த எதிர்பார்ப்பு பொதுவானது. நம்முடைய இலட்சியமே, நம்மைச் சார்ந்தவர்கள், குழந்தைகள்,பெற்றோர் இவர்களை மெச்சுதலாக இருக்க வேண்டும். ''ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம். (மத். 7:12) மற்றவர்களை மெச்சுதல் என்பதை எளிமையாக இந்த தங்கச் சட்டத்தைப் படித்து செயல்படுத்துவதாகும்.இது செய்யப்படவும் வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் அன்பினால் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திலும் முக்கியமாகக் காணப்படவேண்டியது இந்த அன்பு என்பதுதான். ''ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே.4:32) ''மன உருக்கம்'' என்பது

முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது.யாதொருவர் சாந்தம், அமைதி, பாதுகாப்பு, புரிந்து கொள்ளுதல் ஆகிய குணங்களுடன் இருந்தால் அவர்கள் தங்கள் குடும்பத்தை நன்றாக கட்டுவார்கள். புருஷர்கள் குறிப்பாக முரட்டுகுணத்தை தவிர்க்க வேண்டும். ''புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள் அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்'' (கொலோ.3:19) ''இரக்கம்'' ''மனதுருக்கம்'' ஆகிய இரண்டு குணங்களும் குடும்பத்தை பலமாகக் கட்ட தேவைப்படுபவையாகும்.

கிறிஸ்தவக்குடும்பங்கள் கட்டாயமாக 1. ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்க பழகிக்கொள்ள வேண்டும். 2. ஒருவர் பேச்சுக்கு ஒருவர் மரியாதை கொடுக்க வேண்டும். 3. ஒருவரில் ஒருவர் அன்பு கூற வேண்டும். 4. எல்லோரும் ஒன்றாக சேர்ந்து இருப்பதில் அதிக நேரத்தை செலவு செய்யவேண்டும். 5. குடும்பத்திற்காகவும், தேவனுக்காகவும் வல்லமையாக ஒவ்வொருவரும் ஒப்புக்கொடுக்க வேண்டும். 6. அன்பாகவும், மனதுருக்கமாயும் இருக்க வேண்டும் 7. ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். 8. ஒருவரையொருவர் மெச்சிக்கொள்ள வேண்டும் 9. ஒருவர் சொல்வதை மற்றவர் கவனிக்க வேண்டும் 10. மற்ற குடும்பங்கள் பரலோகம் செல்ல உதவி செய்ய வேண்டும்.


வல்லமையான குடும்பங்கள்

வல்லமையான சபைகளை கட்ட முடியும்.

**B. B. சோட்** **R. R. நாயகம்.**

**''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்...''** எபி.11:6

**'' ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''.** ரோமர் 10:17



# ஜெபித்த உங்களுக்கு நன்றி

*மே 2.3.4-2001 ஆகிய தேதிகளில் ஏலகிரி மலையில் நடந்த வேனிற்கால வேதாகம முகாமிற்காகவும், திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கிற்காகவும் ஜெபித்த நல் உள்ளங்களுக்கு நன்றி! நன்றி!!*

## வாசகர்களுக்கு முகாம் பற்றிய சில தகவல்கள்

- ★ பங்கு கொண்ட நாடுகள் - 2
- ★ பங்கு கொண்ட மாநிலங்கள் - 2
- ★ பங்கு கொண்ட மாவட்டங்கள் - 15
- ★ பங்கு கொண்ட நகரங்கள் - 50
- ★ பங்கு கொண்ட பிராந்திய சபைகள் - 45
- ★ பங்கு கொண்ட மொத்த நபர்கள் - 405
- ★ ஞானஸ்நானத்தின் மூலம் புதிய ஏற்பாட்டு நற்செய்திக்கு கீழ்ப்படிந்தவர்கள் - 5

**திருமறை ஆசானை வெளியிடும் காங்கயம் கிறிஸ்துவின் சபையாரால் நடத்தப்படும் அனைத்து ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். பங்கு பெறுங்கள்.**

**ஆசிரியர்**

# I&II. நாளாகமம் ஒரு கண்ணோட்டம்

**1. காலம்** : ஏறக்குறைய கி.மு. 450 425

**2. ஆசிரியர்** : எஸ்றாவாகயிருக்கலாம் என்று யூதர்களால் நம்பப்படுகிறது.

**3. இந்நூல் பற்றி** :

அ) இந்நூல் ஆதாம் காலந்தொடங்கி பாபிலோன் சிறையிருப்பிலிருந்து யூதர்கள் விடுதலையான காலம் வரை தனக்குள்ளடக்கியிருக்கிறது.

ஆ) இந்நூல் பெர்சிய ராஜாவாகிய கோரேஸ், இஸ்ரவேலர்களை விடுதலை செய்த நிகழ்வோடு முடிகிறது.

இ) **செப்துவாகிந்த்** என்னும் கிரேக்க வேதாகமத்தில், இந்நூலுக்கு, ''விடுபட்ட வைகளைப் பற்றியது'' என்று தலைப்பு போடப்பட்டிருக்கிறது.

ஈ) எபிரேய வேதாகமத்தில் இந்நூல் கடைசி நூலாக இடம்பெற்றி ருக்கிறது.

உ) சாமுவேல், இராஜாக்கள் ஆகிய நூல்களில் இடம் பெற்றிருக்கிற அதே வரலாற்றுக் காலங்களைக் குறித்தே இந்நூல்களிலும் எடுத்துரைக்கிறது.

ஊ) இந்நூல்கள் பழைய ஏற்பாட்டு வரலாற்று கடைசிக் காலங்களில் எழுதப்பட்டிருக்கிறது. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று திரும்பும் யூதர்களின் ஆவிக்குரிய சுதந்திரம் குறித்து வலியுறுத்தவே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

**4. இந்நூலின் செய்தி:**

a. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று நாடு திரும்பிய யூதர்களுக்கு தேவனுடன் இருக்கும் உடன்படிக்கை உறவை எடுத்துக்கூறுகிறது.

b. இந்நூல் ஆசாரியனுக்குரிய பணியில் ஒரு மார்க்க வரலாற்று நூலாக திகழ்கிறது.



# வெளிப்படுத்தின விசேஷம்

***அதிகாரம்: 13:11-18***

வெளிப்படுத்தல் 13-ம் அதிகாரமானது, சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்ததும், சாத்தானால் மிகுந்த அதிகாரம் கொடுக்கப்பட்டதுமான மிருகத்தை நமக்கு அறிமுகம் செய்தது தேவனையும், நன்மையானவைகளையும் தூஷிக்கும்படியாகவும் தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்களை அழிக்கும் படியாகவும் இதற்கு குறிப்பிட்ட காலம் அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த மிருகமானது நியாயந்தீர்க்கப்பட்டு, தேவனாலே நித்தியகாலமாக தண்டிக்கப் படும். ஆகையால், தன்னுடைய எல்லாப் பரிசுத்தவான்களும் உண்மையும் சகிப்புத்தன்மையுள்ளவர்களாயிருக்க தேவன் ஊக்கப்படுத்துகிறார். இந்த அதிகாரத்தில் எஞ்சியிருக்கிற பகுதி, இரண்டாம் மிருகம் பற்றியும் அதன் துர்க்கிரியைகள் பற்றியும் நமக்கு எடுத்துரைக்கிறது.

வெளி.13:11-ல் பின்பு வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன். அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையத யிருந்தது. வலுசர்ப்பத்தைப் போல பேசினது என்றுள்ளது. முதலாவது மிருக சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்தது (13:1) இப்பொழுது இந்த இரண்டாம் மிருக பூமியிலிருந்தும் சாத்தானுடைய கருவிகள் எழும்பி வருவது, அவள் த கைவசத்தில் பல போராயுதங்களைக் கொண்டுள்ளாள் என்பதை விவரிக்கிறது இது சாத்தானுடைய தந்திரங்களை நாம் அறியாதவர்களாயிருக்கக்கூடாது என் பவுலின் வார்த்தைகளை நினைவுப்படுத்துகிறது (2.கொரி.2:11) இந்த இரண்டா மிருகமானது முதல் மிருகத்தைப் போன்றே அதிகாரம் கொண்ட (13:12) பிசாசி மற்றுமொரு கருவி என்று தெளிவாகவே தெரிகிறது. இந்த இரண்டாம் மிருகத்தி வேலையாதெனில் "சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்து முந்தி மிருகத்தை பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்வது" இந்த நோக்கத்த நிறைவேற்றுவதற்கு இரண்டாம் மிருகமானது, "மனுஷருக்கு முன்பா வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரி அற்புதங்களை நடப்பித்தது மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களை செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகள மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒ சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற் (வெளி.13:13,14).

இந்த இரண்டாம் மிருகம் " கள்ளத்தீர்க்கதரிசி" என்றழைக்கபட்ட (வெளி.16:13;19:20; 20:10) அதற்கு ஆட்டுக்குட்டியைப் போன்று இரண் கொம்புகலிருந்தது. ஆனால் வலுசர்ப்பத்தைப் போன்று பேசினது. அ பிசாசின் வார்த்தைகளைப் பேசினது.ஆனால், ஆட்டுக்குட்டியைப் போ காட்சியளித்தது. இயேசுகிறிஸ்து, "கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்

யிருங்கள்.அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத்.7:15) என்று நம்மை எச்சரித்தார். இன்னும் கர்த்தர், " அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால், அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்கு தக்கதாயிருக்கும் (2.கொரி. 11:14,15) என்றார். இந்த கள்ளத்தீர்க்கதரிசிகள், ஜனங்களை வஞ்சிக்கும்படியாய், அடிக்கடி அற்புதங்களையும், அடையாளங் களையும் செய்வார்கள் (உபா.13:1-5;மத்.24:24;மாற்.13:22) ஆனால், அவைகள் ஒருபோதும் உண்மையான அற்புதங்கள் அல்ல. (இன்றைக்கும் கூட பெஸ்தெ கொஸ்தே பாஸ்டர்களும்,தெய்வீக மனிதர்களென்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்ளும் பிறமதங்களைச் சேர்ந்தவர்களும் பொய்யான அற்புதங்கள் மூலம் அநேகரை வஞ்சிக்கிறார்கள்) உண்மையான அற்புத வல்லமை தேவனிடத்திலிருந்துதான் வரமுடியும். உண்மையான அற்புதங்கள் உண்மையான தீர்க்கதரிசிகளுக்கு தேவனுடைய சாட்சியாயிருக்கிறது. இந்தவிதமாகத்தான் தேவனுடைய வார்த்தை உறுதிப்பட்டது (எபி.2:3,4;யாத்.4:1-9;30,31;1.ராஜா. 17:17-24;18:21-39; யோவா.3:1,2;5:36,37;மாற்.16:20;அப்.8:6; 14:3;15:32) மனிதனுக்கான தேவனுடைய வெளிப்பாடு இப்பொழுது முழுமையானதா யிருக்கிறது. தேவன் இன்றைக்கு அற்புதங்கள் நடப்பிப்பதில்லை 1.கொரி. 13:8-10 அற்புதங்கள் செய்யும் வல்லமையை பிசாசுக்கும், அவனுடைய ஆட்களுக்கும் தேவன் கண்டிப்பாக கொடுக்கவில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகள் உண்மையான அற்புதங்களைச் செய்வதில்லை. ஆனால், சாத்தானுடைய செயலின்படி, சகல வல்லமையான காரியங்களும், பொய்யான அற்புதங்களும் நடக்கும். (2.தெச.2:9)இந்தப் பொய்யான அற்புதங்களை நம்பவேண்டாமென்று இயேசு தம்முடைய சீடர்களை எச்சரித்தார் (மத். 24:23-26; மாற்.13:21-23) அவைகள் உண்மையான அற்புதங்களாக இராமல்,பொய்யான வார்த்தைகளுடன் கூடியதாக இருக்கும். இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகளை அவர்களுடைய கனிகளாலே அறியலாம். (மத்.7:16-20) அவர்கள் தீதான காரியங்களைப் போதிக்கவும் கடைப்பிடிக்கவும் செய்கின்றனர். உலகம் அவர்களை விசுவாசிக்கிறது. ஏனெனில் உலகம் சத்தியத்தை நேசிப்பதுமில்லை நம்புவதுமில்லை. அவர்கள் அநீதியில் பிரியப்படுகிறார்கள் (2தெச.2:8-12).

இரண்டாவது மிருகம், "வஞ்சனையுடையதாயிருந்தது" தன்னுடைய பொய்யான அற்புதங்களாலே மனிதர்களை வஞ்சித்து "மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக்கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம் போக்கி பட்டயத்தினாலே காயப்பட்டு பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்கு சொல்லிற்று" (17:14) முதலாம் மிருகம் போன்று ஒரு சொரூபம் பண்ணச்சொல்லி, மனிதர்களை வஞ்சித்தபிறகு, அம்மிருக்கத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவம் கொடுத்தது (13:15)

இந்த இரண்டாம் மிருகத்தின் மூலமாக வஞ்சிக்கப்படாத ஜனங்களுக்கு எதிராக சரீர உபத்திரவங்களை பொய்யான மார்க்கத்தின் வஞ்சனையைக் கொண்டு உபயோகித்தான். அதன்பிறகு பொருளாதார உபத்திரவங்களையும் பயன்படுத் தினான். வெளி.13:16,17ம் வசனங்கள் இரண்டாம் மிருகமானது, " சிறியோர் பெரியோர் ஐசுவரியவான்கள் தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவைகள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும் அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நமாத்தின் இலக்கத்தை யாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது என்று சொல்லுகிறது. அந்த முத்திரை என்னவென்று விவரிக்கப்படவில்லை. ஆனால் கவனிக்கப்படத்தக்கதென்னவெனில் மிருகத்தை வணங்குபவர்கள் அடையாளங் காணப்படக்கூடியவர்களாயிருந்தார்கள். ஆனால், மிருகத்தின் முத்திரையும், நாமமும், இலக்கமும் இல்லாதபடியால் கிறிஸ்தவர் களால் விற்கவும்,வாங்கவும் கூடாமற்போயிற்று.இந்த சரீர பொருளாதார உபத்திரவம் வல்லமையுடையதா யிருந்தது. இதைப் போன்றதொன்றை நாம் வெளி 6:3-11-ல் கண்டோம்.

இங்கே இரண்டாம் மிருகம் அல்லது கள்ளத்தீர்க்கதரிசி என்பது என்ன? என்ற கேள்வி வருகிறது முதலாம் மிருகத்தைப் போன்றே இந்த இரண்டாம் மிருகமும் என்னவென்று சரியாக அடையாளப்படுத்தப்படவில்லை. இன்னும் முதலாம் மிருகத்தைப் போன்றே இரண்டாவதும், சாத்தானுடைய கருவியாயி ருந்தது. மேலும் இந்த மிருகமானது உண்மையான சபைக்கு எதிராக பொய்யான மார்க்கத்தை பரப்புவதிலும் உபத்திரப்படுத்துவதிலும் தன்னை ஈடுபடுத்தியிருந்த தென்றும் அறிகிறோம்.

முதலாம் மிருகம் ரோமசாம்ராஜ்யத்தைத் தான் குறிப்பாக குறிக்கிறதென்று விசுவாசிக்கிற அநேக சகோதரர்கள் இந்த இரண்டாம் மிருகமானது முதலாம் மிருகத்தின் சொரூபத்தை ஜனங்கள் வணங்கும்படியாக செய்கிறதென்று நம்புகின்றனர். (2.தெச.2:1-12; 1.தீமோ.4:1-3) ஆனால் இந்த மிருகமானது பொய்யான மார்க்கத்தின் குறிப்பிட்ட காரியங்களை அடையாளப்படுத்தினாலும் அல்லது பொதுவாய் ஒரு பொய் மார்க்கத்தை அடையாளப்படுத்தினாலும், நமக்கு கிடைக்கும் பாடம் என்னவெனில் எல்லா வகையான கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டும். (மத்.7:15-27; யோவா.10:1-5; 1.தீமோ.1:3,4; 6:3-5).

வெளி 13:18 இதிலே ஞானம் விளங்கும் அந்த மிருகத்தின் இலக்கத்தை புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக் கடவன். அது மனுஷனுடைய இலக்கமா யிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு என்று முடிகிறது. இந்த எண் 666 பற்றி பொய்யான உபதேசங்கள் உட்பட பலகாரியங்கள் எழுதப்பட்டுள்ளது. இதற்கு பல அனுமானங்களும், விளக்கங்களும் உண்டு. ஆகிலும் நாம் அபாயமானவைகளைத் தடுப்பது நல்லது இந்த இடத்தில் வெளிப்படுத்தல்களின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்பை நினைவுக்குகொண்டுவருவது பயனுள்ளதாக இருக்கும் (வெளி.22:18,19) இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான்

சாட்சியாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். 22:19 ஒருவன் இந்த தீர்க்க தரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால் ஜீவ புஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்.

ஒரு காரியம் நமக்குத் திட்டமாகத் தெரிகிறது. எண் 666 என்பது ''மனிதனுடைய இலக்கம்'' பல வேறுப்பட்ட மொழிகளில் உள்ள பல்வேறு எழுத்துக்கள் குறிப்பிட்ட எண்ணிக்கை பலனோடு சம்பந்தப்பட்டுள்ளதென்பது நமக்குத் தெரியும். நமக்கு முன் உள்ள பெரிய பிரச்சனை என்னவென்றால் இந்த எண் 666 உருவகப்படுத்துகிற ''மனிதன்'' தேவனால் நமக்கு கொடுக்கப் படவில்லை. ஆகையால் உண்மையாக இது யார் என்று நமக்குத் தெரியவில்லை. இந்த நூல் எந்த சகோதரர்களுக்கு எழுதப்பட்டதோ, அவர்களுக்கு இது யார் என்று தெரிந்திருக்கும். அது அவர்களுக்கு நன்மை பயக்கப் போதுமானதாக இருந்தது.கிறிஸ்தவர்கள் சக்கரவர்த்தி டொமிசியன் உபத்திரவப்படுத்தின அந்த நாட்களில் இந்த வெளிப்படுத்தல் நூலில் அந்த மனிதன் யாரென்று அடையாளங் காட்டப்பட்டிருந்தால் கிறிஸ்தவர்களுக்கு ஆபத்தாக முடிந்திருக்கும்.

வெளிப்படுத்தல் நூலின் பிரதான பாடத்தை நாம் கற்றுக்கொள்வதற்கு இந்த எண் 666 யாரை அல்லது எதை பிரதிநிதித்துவப்படுத்துகிறதென்று கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. தேவன் நமக்கு எதை வெளிப்படுத்தியிருக்கிறாரோ அது குறித்துத்தான் நாம் அதிக அக்கரையுள்ளவர் களாயிருக்க வேண்டும். வெளிப்படுத்தாதவைகளைக் குறித்தல்ல (உபா.29:29)

மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்க மறுப்பதும் அல்லது முத்திரையையும் அல்லது இலக்கத்தையும் தரித்துக்கொள்ள மறுப்பதும், உபத்திரவத்தைக் கொண்டு வருவதாயிருந்தாலும் நாம் மிகத்திட்டமாகத் தெரிந்து கொள்ளும் பாடம் யாதெனில், ஒவ்வொரு கிறிஸ்தவனும், தங்கள் மரண பரியந்தம் உண்மையும், உறுதியுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பது அன்றும்,இன்றும் அவசியமாயிருக்கிறது. (1.கொரி.15:58; வெளி.2:16)ஏன்? மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குபவர்களும் அதன் முத்திரையைத் தரித்துக்கொண்டிருப்பவர்களும் நரக அக்கினியிலே, தங்கள் நித்தியத்தை க் கழிப்பார்கள். (வெளி.14:9-11; 16:1,2) தேவனை வணங்கியவர்களும், மிருகம், அதன் சொரூபம் அதன் முத்திரை மற்றும் அதன் நாமத்தின் இலக்கத்தின் மீது வெற்றி கொண்டவர்கள், பரலோகத்தில், நித்திய ஜீவனில் பிரவேசிக்கும் பாக்கியம் பெறுவர் (வெளி.14:1-7;15:1-4;20:4).

இது நமக்குத் தரும் பாடம் என்னவெனில் '' முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். (மத்.10:22; 24:13; மத்.13:13). பொறுமையினாலே, நம்முடைய ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுவோம். (லூக்.21:19).

**Jon Macon** **EZSR**

# மனிதனே உன் விலை என்ன?

இரண்டாம் உலகப்போர் நடந்த சமயம் வட அமெரிக்காவிலிருந்து தென் அமெரிக்காவுக்கு பருத்தி எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டது. இதனால், தென் அமெரிக்காவில் பருத்தியின் விலை கிடுகிடுவென உயர்ந்தன. வடக்கையும், தெற்க்கையும் பிரிக்கும் பனாமா கால்வாயில் ஒரு சுங்கச் சாவடி.அதன் அதிகாரி நேர்மையும் கண்டிப்புமிக்கவர். சில பேராசை பிடித்த வியாபாரிகள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பருத்தியை பனாமா கால்வாய் வழியாக தென் அமெரிக்காவிற்குக் கடத்தி சென்று கொள்ளை லாபம் அடைய திட்டமிட்டனர். அந்தக் கண்டிப்பான அதிகாரியிடம் லஞ்ச பேரம் பேசினர். அவர் சம்மதிக்கவில்லை. பேரத் தொகை 5000 டாலரிலிந்து படிப்படியாக இரண்டு லட்சத்தை எட்டியது.

இப்போது அந்த உண்மையும், நேர்மையும் உள்ள அதிகாரியின் உள்ளத்தில் டாலர் கட்டுகள் கண்சிமிட்டின. இதயத்துடிப்பு அதிகரித்தது. நேர்மையும் கண்டிப்பும் மிக்க உன் வாழ்வில் இந்த மிடுக்கான சீருடை வெற்றுப் பெயர் தவிர வேறென்ன இன்பம் கண்டாய்? உன் வாழ்விலும் கனவிலும் நினையாத சுகபோகம் கைநீட்டி உன்னை வசந்த வாசலுக்கு அழைக்கிறது. ஏற்றுக்கொள் என்றது. மன இச்சை. இந்தப் பேராசைக்காரர்களின் மாயவலையில் விழுந்துவிடாதே. இத்தனை காலமும் நேர்மையும் ஒழுக்கமும், கண்டிப்புமாய் வாழ்ந்த நீ, ஒரு நொடி சபலத்திற்கு இடம் கொடுத்தால் சட்டம் உன் கையில்,விலங்கு மாட்டும். நீ சிறையில் தள்ளப்படுவாய்; பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர், என்ற கடவுளின் வார்த்தை மனக்கண்முன் தோன்ற பைத்தியகாரா ஒன்றா? இரண்டா? இரண்டு லட்சம் நழுவவிடாதே! யாருக்குத் தெரியப்போகிறது என மன இச்சை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்த இப்படி மனதில் நடந்த கடும் போராட்டத்தால் அந்த அதிகாரிக்கு மூச்சு திணரி வியர்த்துக் கொட்டியது. உடனே அந்த அதிகாரி, பாவிகளே! என்னை விலைக் கொடுத்து வாங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே என அலரிக்கொண்டே கதவை தாழிட்டுக்கொண்டார்.

ஆசிரியர் கதையை நிறுத்தி மாணவர்களைப் பார்த்தார், மௌனத்தில் உறைந்து போன மாணவர்களைத் தட்டி எழுப்புவது போல அவரே தொடர்ந்தார். நேர்மையும் ஒழுக்கமும் கண்டிப்பும் நிறைந்த அந்த அதிகாரியின் வார்த்தைகளை கவனித்தீர்களா? தெரிந்து கொள்ளுங்கள். ***எந்த மனிதனுக்கும் ஒரு விலையுண்டு. ஆனால் எதற்கும் விலைபோகாத மனிதர்களும் உண்டு. அவனே இறைவன் மீது தன்நம்பிக்கைக் கொண்டவன்.மறுமையில் தண்டனைக்குப் பயந்தவன் என்று முடித்தார்.*** இந்த செய்தியில் நாம் தெரிந்த கொள்ள வேண்டியது.

அந்த அதிகாரி பணத்தின் மீது நோக்கமாயிருந்து அவர்கள் கொண்டு வந்த அந்தப் பணத்தை வாங்கியிருந்தால் சட்டத்தின் பிடியில் சிக்கி எல்லாவற்றையும் இழந்துவிட்டிருப்பான். இதைக் குறித்து வேதம் சொல்லுகிறது. (எபி.13:5) நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். (1.தீமோ.6:10,11) ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். (வச.10) பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்கிறார். ஆகவே, நாம் பண ஆசையில்லாதவர்களாய் போதுமென்கிற மனதோடு தேவ பக்தியாயிருக்க வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையிலும் சில நேரங்களில் அந்த அதிகாரியின் மனதில் நடந்த போராட்டத்தைப் போல நம்முடைய மனதிலும் நடக்கிறது. பவுலுக்கே அவருடைய வாழ்க்கையில் இப்பேர்பட்ட போராட்டம் நடந்தது என்று அவரே சொல்லுகிறார். கேளுங்கள் (ரோ.7:15 முதல் 24 முடிய) (வச.23) ஆகிலும் என் மனதின் பிரமானத்துக்கு விரோதமாய் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என்அவயங்களில் இருக்க காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னை சிறையாக்கிக் கொள்கிறது. ஆகவே நாம் ஆவியின்படி நடந்தால் இப்பேர்பட்ட போராட்டம் நமக்கில்லை என்கிறார். பவுல் (ரோம.8:1) ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்ட வர்களுக்கு, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. இப்பேர்பட்ட ஆவிக்குரிய மனிதனை எந்த மனிதனாலும் விலை கொடுத்து வாங்க முடியாது. அவன் யாருக்கும் அடிமையாகவும் முடியாது. ஏனென்றால் அவன் கிறிஸ்துவுக்கு அடிமையாயிருக்கிறான். அவன் தேவனுடைய ஆலயமாகவும் இருக்கிறான். (1.கொரி.6:19) உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? (1.கொரி. 7:22) அந்த அடிமையானவனை தேவன் கிரயத்துக்கு வாங்கியிருக்கிறார். (1.கொரி.6:20) அப்போஸ்தலன் பேதுரு கூறுகிறார். (1.பேது.1:19) குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே பாவம் என்னும் அடிமைதனத்திற்கு விலைபோன மனிதனை கிறிஸ்து அவருடைய விலைமதிப்பில்லாத இரத்தத்தைக் கொடுத்து மீட்டுக்கொண்டார் (வாங்கிக் கொண்டார்) இப்படி மீட்டுக் கொள்ளப்பட்டவர்களில் சிலர் அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினதுபோல (1.தீமோ.6:9) பணஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாத்தை விட்டு வழுவி அநேக

வேதனைகளாலே தங்களை உருவக் குத்தி கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட பண ஆசை, பொருளாசைப்பிடித்த ஊழியர்களையும் விசுவாசிகளையும் சில கள்ளக் கிறிஸ்தவர்கள் விலை கொடுத்து வாங்கி தங்களுக்கு அடிமையாய் வைத்திருக்கிறார்கள். ஆனால், வேதனைக்குரிய உண்மை என்னவென்றால் உண்மையான சத்தியத்திற்குள் இருக்கிற சில ஊழியர்களே பல விசுவாசிகளையும் சபையில் முன் மாதிரியாய் இருக்கக்கூடிய சில சகோதரர்களையும் தங்களுக்கு சாதகமாக வைத்துக்கொண்டு செயல்படுவதுதான் மிகவும் வேதனை தரக்கூடிய செயலாயிருக்கிறது. ஆகவே, என் பிரியமான தேவனுடைய ஜனங்களே தயவுகூர்ந்து எபிரேய ஆசிரியரின் அறிவுரையை கேளுங்கள்.

(எபி.13:5) நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னை விட்டு விலகுவதில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. ஆகவே பவுல் சொல்வது போல நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள், மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்.

**யோசுவா செல்வம்**

அரக்கோணம்.

---

## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட சுவசேஷக் கைப்பிரதிகள் ***(Gospel Tracts)*** உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிக குறைந்த விலை தேவைக்கு முந்துங்கள்.**


**தலைப்புகள்**

1. **உன்னை நீயே எண்ணிப்பார்**
2. **கண் இல்லாதவன் கண்டுகொண்டான்**
3. **மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?**
5. **ஞானஸ்நானம்**
6. **யார் கிறிஸ்தவன்?**
7. **ஆராதனை**
8. **இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்...**
9. **சபை என்பது என்ன?**

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத்திட்டம்*
*தபால் பெட்டி எண்.27*
*காங்கயம் - 638 701 இந்தியா.*
*போன்: 04257 - 20030*

சிறுவர்பகுதி



# ஒரு இளைஞனும், ஒரு கரடியும், ஒரு இராட்சசனும்

எனதருமை சிறுவர்களே, போன மாதசிறுவர் பகுதி இனிதாய் அமைந்திருக்கும் என நம்புகிறேன். இம்மாதமும் பயனுள்ளதாய் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். இப்பொழுது நாம் கதைக்குச் செல்லலாமா!

தேவனுடைய ஜனங்களான இஸ்ரவேலர்கள் தங்களுடைய எதிரிகளான பெலிஸ்தர்களுடனே அடிக்கடி சண்டையிட்டு கொள்ள வேண்டியதாயிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் கோலியாத் என்னும் இராட்சசன் இஸ்ரவேலரின் சேனையிலிருந்து ஒருவனை அனுப்பி தன்னுடனே போரிடுமாறு சவால் விடுத்தான்.

இஸ்ரவேலரும், அவர்களுடைய ராஜாவும், தலைவனுமாகிய சவுலும், அச்சவாலை கேட்டபொழுது, மிகவும் பயந்தார்கள். ஏனெனில் அவன் எல்லா மனிதர்களை போன்ற ஒரு சாதாரண மனிதன் அல்ல. வேதாகமம் அவனுடைய உயரத்தை குறிப்பிடும் பொழுது அவன் ஆறு முழமும் ஒரு ஜாண் அளவுமுள்ளவனாயிருந்தான் என்று கூறுகிறது. ஒரு முழம் என்பது ஏறக்குறைய 1 1/2 அடி மற்றும் ஒரு ஜாண் என்பது அரை முழம் ஆகும். இதன்படி கணக்கிட்டால் அவன் ஏறக்குறைய 10 அடி உயரம் என்றாலும் அந்நாட்களில் தாவீது என்னும் பேர்கொண்ட ஒரு இளைஞன் இஸ்ரவேலர்களின் படையிலிருந்த தன் சகோதரர்களை பார்க்க வந்திருந்தான். அப்பொழுது கோலியாத்தின் இளக்காரமான சவாலை யாரும் ஏற்காமல் மௌனம் சாதிப்பதை அறிந்து கோபமடைந்த அவன் தானே அந்த ராட்சசனிடம் போரிட தாவீது ஆயத்தமானான். சவுல் நல்ல பயிற்சியுடையவனை தாவீது எதிர்கொள்ள முடியுமா என்று சந்தேகப்பட்டான். ஆனால் அவன் தன் தந்தையுடைய மந்தையை சிங்கத்தின் வாய்க்கும் கரடியின் வாய்க்கும் தப்புவிக்க முடியுமானால் இப்பெலிஸ்தனையும் தோற்கடிக்க முடியும் என்று கூறினான். இன்னுமாக தாவீது, என்னை சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்த பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான். அப்பொழுது சவுல் தாவீதை பார்த்து போ! கர்த்தர் உன்னோடு இருப்பாராக என்றான்.

எப்படி வியக்கதக்கதொரு காரியத்தை தாவீது வெளிப்படுத்தினான். ஆழ்ந்த மனதுணிச்சலை கொண்டிருந்தான். இதன் மூலம் மகா பெரிய விசுவாசத்தை இவன் தேவனிடத்தில் காண்பித்தான்.

இளைஞனும் உருவத்தில் சிறியவனாக இருந்த தாவீது எப்படி 10 அடி உயரமுள்ள இராட்சசனை எதிர்கொள்ள ஏன் விருப்பப்பட்டான்? தாவீது தான் சிங்கம் கரடி போன்ற மிருகங்களை கொன்று அதைவெல்வதற்கு சரியானதொரு காரணம் உண்டென்று அறிந்திருந்தான். அது என்னவெனில் தேவன் அவனோடு இருந்தார் என்பதே. இன்னும் அவன் அந்த கொடூரமான மிருகங்களை வெல்ல முடியுமானால் கோலியாத்தோடும் போரிட்டு வெல்ல முடியும் என நம்பினான். இக்கதை எப்படி முடியும் என்று அறிவீர்கள். தாவீது ஐந்து கூழாங்கற்களை எடுத்து தன் கவனிலே வைத்து அதை வீசினான். அது அவனுடைய நெற்றியில் பட்டு அவன் உயிர் பிரிந்தது. தங்கள் தலைவர் இழந்த பயத்தில் பெலிஸ்தர்கள் ஓடினார்கள்.

இளைஞனாயிருந்தாலும் தேவன் மேல் வைத்த நம்பிக்கையினாலே பின்பு தாவீது இஸ்ரவேலர்களுக்கு இரண்டாவது ராஜாவாகவும் எல்லோராலும் நேசிக்கப்படவும் தாவீதை உயர்த்தினார். உங்களுடைய வாழ்க்கையில் கடினமான காரிங்களைச் சந்திக்கும்போது, தவறான செயல்களைச் செய்ய சோதிக்கப் படும்போது, அல்லது சாத்தானாகிய ''இராட்சசனைத்'' தோற்கடிக்க விரும்பும் போது தாவீதின் தைரியத்தையும் துணிவையும், தேவன் மீது அவன் கொண்டிருந்த விசுவாசத்தையும் நினைத்துக்கொள்ளுங்கள். வெகு காலத்துக்கு முன் வாழ்ந்த இந்த இளைஞன் சிறுவர்களாகிய நாம், இன்றைக்கும் சிறப்பாக செயல்படு வதற்கும், பின்பற்றுவதற்குமான ஒரு மாதிரியை விட்டுச் சென்றுள்ளான். பின்பற்றுவோமா?

சந்தேகமென்ன, பின்பற்றுவோம்.

தமிழில் R.ஏபில் ரோஜர் நாயகம் **(R.A.R.Nayagam)**

## வேதாகமம் என்றென்றும் அழியாதது

*வால்டயர்***(Valtaire)** *என்பவன் ஒரு தெய்வ பக்தியற்ற கொடுமையான பிரெஞ்சு மனிதன். கி.பி. 1778ம் ஆண்டு, இன்னும் நூறு ஆண்டுகளில் வேதாகமம் என்ற ஒன்று இப்புவியில் இராது எனக் கூறி புளகாங்கிதம் அடைந்தான். ஆனால் நூறு ஆண்டுகளுக்குள் அவன் மரித்தான். அவன் அறைகூவல் விடுத்த செய்தியை அச்சிட்ட அதே பதிப்பகத்தில் வேதாகமம் அச்சிடப்பட்டது. அவன் வாழந்த வீட்டை ''ஜெனீவா வேதாகம சங்கம்'' வேதாகமத்தை பாதுகாப்பாக வைக்கப் பயன்படுத்தினார்கள். அங்கிருந்து பல இடங்களுக்கு வேதத்தை வினியோகம் செய்யும் மையமாக அவ்வீட்டை மாற்றினார்கள்.*

*வானமும், பூமியும் ஒழிந்தாலும் வேத வார்த்தைகள் ஒழியாது. ஒழியவே ஒழியாது. (மத்.5:18)*

# சபையின் அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் நியமத்தின்படி பந்தியில் பங்கேற்கின்றனர்

''கர்த்தருடைய பந்தி'' (1.கொரி.2:42) , ''அப்பத்திலும் பாத்திரத்திலும் ஐக்கியமாயிருத்தல்'' (1.கொரி. 10:16) ''அப்பம் பிட்குதல்'' (அப்.2:42) ''கர்த்தருடைய பாத்திரம்'' (1.கொரி.10:21) ஆகிய இந்த திருமறைப் பதங்களெல்லாம் ஆராதனையின் ஒரு பகுதியையே குறிக்கிறது. ''நற்கருணை விருந்து'' , ''நன்மை பெறுதல்'' மற்றும் '' திருச்சபை நியமம்'' போன்ற பதங்கள். கர்த்தருடைய பந்தியைக் குறிக்கும் மனிதக் கண்டு பிடிப்புகளே (இவைகள் திருமறையில் காணும் பதங்களல்ல).

இயேசு கிறிஸ்து சிலுவையிலே அறைப்படுவதற்கு முந்திய இரவு, எருசலேமிலிருந்த ஒரு வீட்டின் மேல் அறையில் கர்த்தருடைய பந்தியை ஸ்தாபித்து கட்டளையிட்டார். திருமறையில் நான்கு இடங்களில் இந்த நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. (மத்.26:26,29; மாற்கு 14:22-25; லூக்கா 22:17-20; 1.கொரி.11:23-26) அவருடைய வார்த்தைகளை பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியவைகளாயிருந்தன. அச்செயலை அவர் குறிப்பிட்டபோது அவரை நினைவு கூருதலின் நியமமாக அது ஸ்தாபிதம் பெற்றது.

பழைய ஏற்பாட்டில், உடன்படிக்கையின் விருந்து கொடுக்கப்பட்டதை பின்னணியாகக் கொண்டு கர்த்தருடைய பந்தி நியமனம் பெறுகிறது. ஆதி.18-ல் ஆபிரகாமுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்ற வாக்குத்தத்தம் புதுபிக்கப்படுகிறது. ஆதியாகமம் 31-ல் யாக்கோபுக்கும் அவனுடைய மாமனாருக்கும் இடையில் சமாதான உடன்படிக்கையின் விருந்து செய்யப்பட்டது (வச.54) ஏசாயா 25:6-10-ல் வரவிருந்தது இரட்சிப்பை ஒரு விருந்து கொண்டாடலாக கூறப்படுகிறது. இயேசு தமது சீஷர்களுக்கு திராட்சைப் பழ இரசத்தை (பாத்திரத்தை)கொடுத்து, ''இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது'' என்றார் (மத்.26:28) பின்னதாக கர்த்தருடைய பந்தி ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்தவனுக்கு தேவனுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை புதுப்பித்தலாக அமைகிறது.

கர்த்தருடைய பந்தி ஒரு நினைவு கூருதலின் ஆராதனை. இயேசு, '' என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள்'' என்றார். (லூக்.22:19) இயேசு தம்மை நினைவு கூறும்படி எந்த ஒரு நினைவுச் சின்னமாக ஆடையையோ, சரீர உருவத்தையோ, சுரூபத்தையோ விட்டு செல்லாமல், எளிமையான கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கும்படியாக மட்டுமே கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தருடைய பந்திமட்டும் தான் உலகில் நடந்த மிகப்பெரிய சம்பவத்தை நினைவுறுத்தும் மிகப்பெரிய நினைவுச் சின்னமாகும். கிறிஸ்தவர்கள் இயேசுவின் சிலுவை மரணத்தை (பலியானதை நினைவு கூரும்போததெல்லாம் அவர்கள் தங்களின் கடந்த கால தேவைகளையும் நம்பிக்கையற்ற பாவ வாழ்க்கை) நிகழ் கால கடமையுணர்வுகளையும் (தேவனுக்குகென்று பரிசுத்தரும், ஆராதனையும் செய்கிற ஜீவியத்தையும்) நினைவு கூறுகின்றனர்.

கர்த்தருடைய பந்தியில் பாத்திரமுள்ள்வுர்களாக பங்கு பெற அதில் பங்கு பெறுவோர் ஒவ்வொரு வரும் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் தன்னை சோதித்துப் பார்க்க வேண்டும் (1.கொரி.11:27,28) கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கூடிவரும் போது சுயசோதனை செய்யும்படியாக கட்டாயப்படுத்தப்படவில்லை என்றாலும்(2.கொரி.13:5) அப்பத்திலும் திராட்சை ரசத்திலும் பங்கு பெறுவதற்கு முன்பாக ஒவ்வொருவரும் எல்லாவகையிலும் தன்னை சோதித்து அறிவது அவசியமாகும். சுயசோதனை என்பது தம்மையே அவரவர் அடையாளம் கண்டு கொள்ளவும் அவர்தம் வாழ்வில் செய்த எந்தப் பாவத்திற்காகவும் மனந்திரும்பவும் உதவுகிறது (சங்.139:23,24) நீதிமொழிகள் 28:13-ல் ''தன் பாவங்களை மறைக்கிறவன் (தன்னைத் தானே சோதித்தறிந்து அவைகளை வெளியிடாமல் இருக்கிறவன்) வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.'' தேவன் அவனுடைய தொழுகையை அங்கீகரிப்பார். பாத்திரமுள்ளவனாக ஒரு கிறிஸ்தவன் பந்தியில் பங்கு பெறும் போது அவன் ஆவிக்குரிய தன் பெலனை (1) இயேசு எதற்காக மரித்தார் என்பதை பிரதிபலித்து (2) புதிய உடன்படிக்கையின் சட்டத்திட்டங்களின் படி தான் வாழ்ந்து காட்ட தீர்மானித்து கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்கிறான்.

கர்த்தருடைய பந்தியில் ''அப்பம்'' ''திராட்சை ரசப் பாத்திரம்'' எனும் இரு பொருட்களை கொண்டது. பஸ்கா பண்டிகையில் புசிக்கப்பட்ட போஜனம் புளிப்பில்லாத அப்பமாகும். (யாத்.12:17-20;மத்.26:17-20) (அப்பத்தை மிருதுவாக்கி உப்பப் பண்ணுகிற) புளிப்பை ஏழுநாட்கள் தங்கள் வீடுகளிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டனர். (யாத்.12:15,19) இயேசுவும் அவரது சீஷர்களும் பஸ்காவின் போஜனத்தை புசித்து முடித்தபின் கர்த்தருடைய இராபோஜன பந்தியை ஸ்தாபித்தார். (அல்லது கட்டளையிட்டார்). இயேசு புளிப்பில்லாத அப்பத்தையே மேல் வீட்டில் புசித்தார் என்று கூறுவது, அவர் யாத்தி.12:15,19 வசனங்களை மீறினார் என அவரைக் குற்றஞ்சாட்டுவதாகும்.

''புளிப்பு'' என்ற உருவக மொழியைப் பயன்படுத்துதன் மூலம் அசுத்தத்தை அல்லது பாவத்தைக் குறிப்பிட்டே கிறிஸ்து பேசினார். (மத்.16:6, லூக்கா12:1; 1.கொரி.5:6-8;கலா.5:9) புளிப்பில்லாத அப்பம் கிறிஸ்துவின் சரீரத்திற்கு மாதிரியாகும். (லூக்கா.22:19) ''அப்பம்'' புளிப்பில்லாமல் வைக்கப்பட்டது போலவே கிறிஸ்து எவ்வளவு பாவமும் இல்லாமலிருக்கிறார் (எபி.4:14; 7:26) புளிப்பாகக் கருதப்பட்ட எந்தப் பொருளும் பஸ்கா பந்தியில் பயன்படுத்தப் படவில்லை.ஏனெனில் அது எபிரேய மக்களுக்கு கொடுக்கப்பட்ட நியமமாகும். (யாத்.12:25-27) இது அவர்கள் எகிப்திலிருந்து ''தீவிரமாய்'' விடுதலை பெற்றதையும் நினைவு கூறப்பட்டது (உபா.16:3) அதுபோலவே; கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்படும் ''புளிப்பில்லாத'' தன்மை, கிறிஸ்தவன் பாவத்திலிருந்து ''தீவிரமாய்'' விடுதலை பெற்றதைக் குறிக்கிறது.

''பாத்திரம் திராட்சை ரசத்தைக் கொண்டது'' இங்கு குறிப்பிடப்படுகிற ''திராட்சைரசம்'' என்பது (அந்தந்த இடத்திற்கேற்ப மதுபான புளிப்பைப் பெறாததாகவோ (ஏசா.65:8;யோவா.2:11)அல்லது மதுபான புளிப்பைப்

பெற்றதாகவோ (நீதி.2:1)குறிப்பிடலாம். ஆனாலும் இவைகள் வேதத்தில் ஒரு இடத்தில் கூட கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்படும் திராட்சை ரசத்தைக் குறிப்பிடுவதில்லை. கர்த்தருடைய பந்திக்கு பயன்படுத்தப்படக்கூடிய இடத்தி லெல்லாம் ''திராட்சை பழ ரசம்'' எனும் (தூய்மை) பொருளில் ''பாத்திரம்'' என்றும் அழைக்கப்படுகிறது. திராட்சைப்பழ ரசம் கிறிஸ்துவின் இரத்தம் சிந்துதலை குறிப்பிடக்கூடியது. (மாற்.14:23-25;மத்.26:27-29) ஏனெனில் அது தூய்மை யானதும் பூரணப்பட்டதுமாகும், ஆதலால் ஜீவன் கொடுக்கும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை இப்படி அடையாளப்படுத்துகிறது.

''திராட்சைப்பழ ரசமும், அப்பமும்'' இயேசுகிறிஸ்துவின் உண்மையான ''இரத்தமாகவும்'' ''சரீரமாகவும்'' மாறுவதாக சில மதவாதிகள் நம்புகின்றனர். மத்தேயு 26:26-28-ல் ''... நீங்கள் வாங்கிப் புசியுங்கள்.இது என்னுடைய சரீரமாயிருக்கிறது... நீங்களெல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது...அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய (அல்லது புதிய ஏற்பாட்டிற்குரிய) என்னுடைய இரத்தமாயிருக்கிறது'', என்று இயேசு கூறினார். இயேசு அப்பத்தை எடுத்து, ''இது என்னுடைய சரீரமாயிருக்கிறது.''என்று கூறும்போது அவர் பூமியிலே வாழ்ந்து கொண்டிருந்த தமது சரீரத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.அவர் சுட்டிக்காட்டிய அந்த அப்பம் அவரது உண்மையான சரீரமாக மாறுமேயானால், அவர் பூமியிலிருக்கும் போது, ஒரே நேரத்தில் அவருக்கு இரண்டு சரீரங்கள் இருந்ததாகப் பொருள்படும். அப்பத்தைக் காட்டி ''இது என்னுடைய சரீரமாயிருக்கிறது'' என்று சொன்னவுடன் அவர் மறைந்திருப்பா ரேயானால் அப்போஸ்தலர்கள் அப்பொழுது அந்த இடத்தில் இயேசுவைத்தவிர வேறொன்றையும் பார்த்திருக்கமாட்டார்கள். அப்பொழுது அவருடைய சரீரம் அற்புதமாக அப்பமாக மாறிவிட்டது என புரிந்து கொண்டிருப்பார்கள். ஆயினும் அவரது சரீரம் அங்கேயே தான் இருந்தது. அவரது (நரம்புகளின்) இரத்த நாளங்களில் இன்னமும் இரத்தம் ஓடிக்கொண்டுதான் இருந்தது. எனவே அப்பமும் திராட்சை ரசமும் இயேசுவின் உண்மையான சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுவதில்லை என்பதை இது நிரூபிக்கிறது.

யோவான் 6:53-ல் ''... நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். '' என்று கூறப்பட்டுள்ளது. இப்பகுதியின் முன்பின் வசனப்பகுதிகள் இயேசு கர்த்தருடைய பந்தியைக் குறித்து இங்கே பேசுவதில்லை எனக் காட்டுகிறது. வசனம் 60-ல் சீஷர்கள் அவைகளை நேரடிப் பொருளில் எடுத்துக் கொண்டனர் . எனக்காண்கிறோம். ஆனால் வசனம் 63-ல் இயேசு அவர்களின் தவறான கணிப்பான அவரது மாம்சத்தையும் இரத்தத்தையும் புசிப்பதை நேரடி பொருளில்குறிக்காமல் உருவக மொழியில் தான் பேசுகிறது எனக் காட்டுகிறார் (வச.53-59).''ஆவியே உயிர்ப்பிக்கிறது மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது நான் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது.'' (வச.63) வசனங்களை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய அன்றாட வாழ்க்கையிலே அதைக்கைக் கொள்வதன் மூலம் மனுஷர்கள் கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுகின்றனர்.

அதோடு கூட கர்த்தருடைய பந்தி ஒரு நினைவு கூருதலின் செயல்''...என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (லூக்.22:19) மாம்ச ரீதியில் வந்திருக்கும் மனுஷர்களை சுட்டிக்காட்டுவது நினைவு கூருதலின் பந்தியன்று. கிறிஸ்து அப்பத்தின் மூலம் மாம்ச ரீதியில் பிரசன்னமானால் கர்த்தருடைய பந்தி ஒரு ''நினைவு கூருதலின் பந்தியாக இருக்க இயலாது.

கர்த்தருடைய பந்தியை கட்டளையிட்டவுடனே இயேசு இராஜ்யம் வரும்வரை அதில் தாம் பங்கு பெறுவதில்லை என்று சொன்னார். (மத்.26:29)லூக்.22:30-ல் இயேசு, ''நீங்கள் என் இராஜ்யத்திலே என் பந்தியில் போஜனம் பண்ணி,...'' என்று குறிப்பிட்டார். எனவே கர்த்தருடைய பந்தி கட்டளை கொடுக்கப்பட்ட நாளிலிருந்து 52 நாட்கள் கழித்து இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. ''தேவனுடைய இராஜ்யம்'' எனும் இப்பதம்,புதிய ஏற்பாட்டு சபையைக்குறித்து பேசுகிற பழைய ஏற்பாட்டுப் பதமாகும். இராஜ்யம் என்பதும்,சபை என்பதும் ஒரே ஸ்தாபித்ததைக் குறிக்கும் இருவேறு வார்த்தைகள் (மத்.16:18,19).

கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பது அவருடைய ''இராஜ்யத்தில்தான்'' என்று இயேசு சொன்னார். (லூக்.22:29,30) எருசலேமிலும், துரோவாவிலும், கொரிந்துவிலும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறப்பட்டன. (அப்.2:42;20:7, 1கொரி.10,11 அதிகாரங்கள்). ஆகையால் எருசலேம், துரோவா, கொரிந்து ஆகிய பட்டணங்களில் இருந்த கிறிஸ்துவின் சபைப் பிராந்தியங்கள் அவருடைய இராஜ்யத்திற்குள்ளானவைகளே. '' இராஜ்யத்திற்குட்பட்டவர்களுக்கு'' மட்டுமே கர்த்தருடைய பந்தி அதாவது கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களுக்கு மட்டுமே. இராஜ்யம் இன்னும் வரவில்லை என்பது சிலரின் கருத்து. அப்படியாயின் இராஜ்யத்திற்குட்படாதவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றல் கூடாது.

எல்லா இராஜ்யத்திலுள்ள கிறிஸ்தவர்களும் பங்குபெற உரிமை பெற்றுள்ளார்களா? ''வெளியரங்கமான (பொதுவாக கூடிவருகிற யாவருக்கும் என்ற) நீதியிலோ ''அல்லது'' அந்தரங்கமான (இன்னின்னாருக்கு என்ற தெளிவு செய்து கொடுத்தல்) நீதியிலோ, வேதம் பேசுவதில்லை. 1.கொரி.11:28-ல் எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்று 1.கொரி.11:28ல் கூறப்பட்டுள்ளது. (நாம் ஒருவரையொருவர் சோதித்தறியும்படி சொல்லப்படவில்லை என்பதையும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் இரண்டு பொருள்களிலுமே பங்கு பெற வேண்டும் எனக் கூறப்படுவதைக் கவனியுங்கள்).

'' என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்'' என்று கிறிஸ்து கூறினார். (லூக்.22:19) எப்பொழுதெல்லாம் இதிலே பங்குபெற வேண்டும் என்று அவர் கட்டளையிட்ட நாளிலே கூறாமல் அதிலிருந்து 52 நாட்கள் கழித்து பெந்தகொஸ்தே நாளிலே ஸ்தாபிக்கப்பட்ட இராஜ்யம் வந்தபின்பே கூறப்பட்டது. அந்த நாள் துவக்கம் கிறிஸ்தவர்கள் வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெற்றுவந்தனர். அப்போஸ்தலர் 20:7-ல் ''அவர்கள் அப்பம் பிட்கும்படி வாரத்தின் முதல்நாளிலே கூடிவந்திருக்கையில்...'' என்று கூறப்படுகிறது. வாரத்தின் முதல்நாள் என்பது வருஷத்திற்கு 52 முறை வருகிறது. கிறிஸ்தவர்கள் ஒன்றாகக் கூடிவரும் போது, '' வாரத்தின் முதல்நாள் தோறும், '' வாரத்தின் முதல் நாளிலே தான்'' கூடிவந்து பந்தியில் பங்கு பெற்றனர் என்பது அப்.20:7-ன் போதனை.

''வாரத்தின் முதல்தோறும்'' எனும் பதம் ஒரு தெளிவான அடுத்து வரும் பெயர் சொல்லைக் குறிப்பது, ஒவ்வொரு முதல்நாளில் மட்டும்தான் எதாவது ஒரு வாரத்தின் முதல் நாளைக் குறிப்பதில்லை. ''ஓய்வுநாளை'' கடைபிடிக்கும்படி கூறப்பட்டபோது (யாத்.20:8)யூதர்கள் ''ஒவ்வொரு'' ஓய்வுநாளையும் கடைபிடிக்கவேண்டியவர்கள் என அறிந்திருந்தது போலவே, கிறிஸ்தவர்களும் அப்.20:7-ல் குறிப்பிடப்படும் வாரத்தின் முதல்நாள் என்பது ''ஒவ்வொரு'' வாரத்தின் முதல்நாளிலும் என்பதை அறிவார்கள். இந்த வாராந்திர ஆசரிப்பின் விளைவாக எருசலேமிலே இருந்த சபை ''தரித்திருந்தார்கள்'' எனும் பதத்தால் கூறப்பட்டனர் (அப்.2:42) கொரிந்துப் பட்டணத்து சபை கர்த்தருடைய பந்தியை பங்குபெற்ற போதெல்லாம் எனும் பதம் அடிக்கடி பங்கு பெற்றனர் எனக் காட்டுகிறது (1.கொரி.11:25,26).

கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவது மட்டுமே கர்த்தருடைய நாளிலே அளவிடப்பட்ட ஆராதனையாகும், ''வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில்...'' (அப்.20:7)வாரத்தின் முதல் நாள் தோறும் பங்குபெறுவது என்பது வாரத்தின் ''முதல்நாளில்'' தான் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படி கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரப்பூர்வமான ஒரு கட்டளையும் கூட. இயேசு கர்த்தருடைய பந்தியை வியாழக்கிழமை இரவு கட்டளையிட்டார். ஆகிலும் அவர் ''இது முதல் இந்த திராட்சப்பழரசத்தை நவமானதால் உங்களோடே கூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று...'' அவர் சொன்னார் (மத்.20:29) கர்த்தருடைய பந்தி அனுசரிக்கப்பட்ட ஒரேநாள் வாரத்தின் முதல் நாள்தான் (அப்.20:7).

அப்போஸ்தலனாகிய பவுல் கூட வாரத்தின் முதல்நாளிலேயல்லாமல் வேறெந்த நாளிலும் பங்கு பெறும்படி அதிகாரம் பெறவில்லை. அப்போஸ்தலர் 20-ல்பவுல் ஒரு அவசரப்பயணத்தில் செல்லவேண்டியிருந்தும் துரோவாப் பட்டணத்து சபையாருடன் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்காகவே தனது பயணத்தை தாமதப்படுத்திக் காத்திருந்தார் (அப்.20:7)இப்படி காத்திருந்தது அவருக்கு வசதிக் குறைவை ஏற்படுத்தியிருந்தபோதிலும் அந்த கர்த்தருடைய நாளுக்கு முன் வந்தஆறுநாட்களில் ஏதாவது ஒரு நாளிலே கர்த்தருடைய பந்தியை பங்கு பெற்றுகொண்டு தனதுபயணத்தை தொடர சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. கர்த்தருடைய பந்தி என்பது கர்த்தருடைய நாளிலே கர்த்தருடைய மரணத்தை நினைவு கூறுவதற்கென கொடுக்கப்பட்ட ஒரே நாளாகும் (வெளி.1:10).

இராஜ்யத்தில் இருப்பவர்கள் திருமறையின் மாதிரிப்படியே செயல்படும்படி தேவன் விரும்புகிறார் (எபி.8:5)கர்த்தருடைய பந்தி இப்படியாக கர்த்தருடைய வருகை வரைக்கும் பங்கு பெறப்படவேண்டியது (1.கொரி.11:26)அவருடைய வருகைக்குப்பின் அவரை நாம் நினைவு கூறவேண்டிய அவசியமிராது. ஏனெனில் நாம் அவரது பிரசன்னத்தில் இருப்போம் (வெளி.22:35)''அவர் இருக்கிறவண்ணமாகவே அவரை தரிசிப்போம்...'' (1.யோவா.3:1).

தமிழில்:**E.A. ஆறுமுகம்.**

# ஆவியில் எளிமையுள்ளவர்கள்...

இயேசு மத்தேயு 5:3ல் **''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்''**என்று பேசும் போது யாரைக் குறித்து பேசுகிறார்? இப்படிப்பட்ட நபருடைய குணாதிசயமென்ன?

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை எளிமை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை முழுமையான மற்றும் பூரணமான வறுமையைக் குறித்து ஆடம்பரத் தேவைகளில்லாத மனிதனைக் குறித்து இங்கு இது பேசாமல் ஒன்றுமற்ற நிலைமையில் இருக்கும் ஒருவனைக் குறித்து பேசுகிறார். இயேசு இப்படிச் சொல்லுகிறார். **முற்றிலும் வறுமையிலிருப்பவன் எவனோ அவன் பாக்கியவான்.** நமதாண்டவர் இங்கு கிரேக்க மொழியில் பேசாமல் அராமிக் மொழியில் பேசுகிறார். நாமிங்கு எளிமை என்று வாசிக்கும் இவ்வார்த்தை யூதர்களுக்கு இப்பூமியில் தனக்கென்று ஒன்றுமில்லாதவனும் மற்றும் அதினால் முழுமையாய் தேவன் மேல் நம்பிக்கை வைத்தவனுமாயிருந்த ஒருவன் என்ற அர்த்தத்தைத் தரும்.

இயேசு இங்கு மாம்சரீதியான பொருளோடு பேசாமல் ஆவிக்குரிய ரீதியில் பேசுகிறார் என்பது எல்லோருக்கும் புரியுமென நம்புகிறேன். நாம் அராமிக் மற்றும் கிரேக்க பின்னணியை மனதில் கொள்ளுவோமானால் தன்னால் ஒன்றும் முடியாது என்று உணர்ந்து மற்றும் தேவன் தான் தன்னை ஒரு அர்த்தமுள்ள நபராக மாற்ற முடியுமென்று அவரையே முழுவதும் நம்புகிற மனிதனை குறித்து இயேசு பேசுகிறார் என்பது விளங்கும்.

இயேசுவால் பேசப்பட்ட பாக்கிய வசனங்களில் இது தற்செயலாக முதலிடத்தை பிடித்ததாக எனக்குத் தெரியவில்லை.**ஆவியில் எளிமை** என்பதின் உட்பொருளே தாழ்மைதான். தேவனை பிரியப்படுத்தவும், கனப்படுத்தவும் முயற்சி செய்யும் ஒருவனுடைய வாழ்க்கையில் தேவையான மற்ற காரியங்களை வளர்த்துக்கொள்ளும் முன் நாம் தாழ்மை உடையவர்களாகவும் மற்றும் அதை வெளிப்படுத்துகிறவர்களாகவும், இருப்பது அவசியம்.

**கிறிஸ்தவத் தோட்டத்தில் தாழ்மை என்பது மிக அழகான மலர்என்று** சொல்லுவதற்கு ஒரு சிறப்பு இருக்கத்தான் செய்கிறது. நாம் பிறரின் வாழ்வில் தாழ்மையைக் கண்டு மெச்சுகிறோம். ஆனால் நம் வாழ்வில் அதை பிரதிபளிக்கிறோமா. இல்லையா என்பது வேறுவிஷயம். தாழ்மை ஓரிடத்தில் இருக்கவேண்டுமென்றால் அங்கு நான் என்ற எண்ணம் சாம்பலாக வேண்டும். இது நம்மில் அநேகருக்கு முடியாத காரியமாயிருக்கிறது.

மத்தேயு 23:12வசனத்தில் இயேசு சொன்ன வார்த்தையின் அர்த்தத்தை நாம் எளிதாய் புரிந்து கொள்ள முடியும். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். அவரின் தாழ்மை மூலமாய் ஒரு தெய்வீக உதாரணத்தை நமக்கு ஏற்படுத்தினார் என்பது எப்பொழுதும் உண்மை என்றாலும் அப்படி அவர் செய்ததின் மூலமாய் தாழ்மை உயர்த்தும் என்ற அத்தாட்சியையும் நமக்கு விட்டுச் சென்றார்.

பிலி: 2:5-11 முதல் உள்ள அதிசயமான வார்த்தைகளை வாசிக்கும் போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தமும் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைதாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்க்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

இவ்வார்த்தைகள் உண்மை என்றால் அவைகள் உண்மைதான். ஆகவே நாம் இதை ஏற்றுக்கொண்டு நம்மை தாழ்த்தி வெறுமையாக்கி அவருடைய அடிச்சுவடை பின்பற்ற வேண்டும் அப்படிச் செய்வதின் மூலமாய் நாம் முடிவில் உயர்த்தப்படுவோம்.

தேவன் தாமே ஆவியில் எளிமையாய் இருக்கத் தேவையான இந்த ஆவிக்குரிய தாழ்மையையும், நன்மையையும் உங்களுக்கு கட்டளையிடுவாராக. ஆமென்.

**Byran Nicholas**

## உங்கள் கவனத்திற்கு

வாசகர்கள் விலாசம் மாறிச்செல்லும்போது, உங்கள் பழைய, புதிய விலாசங்களோடு பதிவு எண்ணையும் சிரமம் பாராமல் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி எங்களுக்கு தெரிவியுங்கள். கர்த்தருடைய பணத்தை வீணாய் செலவிடுவதை தவிர்த்துக் கொள்வதற்கு எங்களுக்கு உதவுங்கள். இதழ் திரும்பி வந்தால் மேற்படி விலாசதாரருக்கு இதழ் அனுப்புவது உடனடியாக நிறுத்தப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆசிரியர்**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00p.m.<br>9.00 - 9.15p.m. | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15p.m | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00pm<br>5.45 - 6.00pm<br>5.30 - 5.45pm | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00pm | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

**Designed by : Aarthi Computers,** 811-Brough Road, Erode-1. Ph : 260971

REGISTERED NEWS PAPER

RNI No. 47661 / 87 - NEW DELI


# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு
செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்
நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக
முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.


Published by **Church of Christ, Kangayam.**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S.RAJANAYAGAM,